www.padippakam.com

# புதிய கலாச்சாரம்


பிப்ரவரி - 2004
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00

**குஜராத்:**
**இந்து மதவெறியரின் தணிக்கையில் ஆவணப் படங்கள்**

**தொண்டு:**
**இன்னும் எத்தனை உதவும் கரங்கள்**

**வரலாறு:**
**ஒரு மன்னன் மனிதனான கதை**

**வாழ்க்கை:**
**நீங்கள் அறியாத செவிலியர்கள்**



## பஞ்சாப் - காஷ்மீர் - குஜராத்

## அரசு பயங்கரவாதமும் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதமும்

படிப்பகம்




# வாசகர் கடிதம்

● திரை உலகில் பவனிவரும் பொய் நாயகர்களைப் பற்றிய கட்டுரை உண்மையைத் தெளிவாகவே வெளிக் கொணர்ந்துள்ளது. சினிமாக் கழிசடைகள் யாரும் இனி கடந்த காலங்களில் நடந்ததைப் போன்று நிச்சயமாக அரசியலில் வெற்றி பெற்றுவிட முடியாது என்றே கருதுகிறேன். ''நழுவல்'' நாடகம் புரட்சிகரச் சிந்தனைக்கு அறிமுகமானாலும் குட்டி முதலாளித்துவச் சிந்தனையுள்ள படிப்பறிவாளிகளின் சிந்தனைப் போக்கையும், வாழ்க்கையையும் தெளிவாக அம்பலப்படுத்தியுள்ளது. ஒரு உதவி இயக்குநரின் ஒருநாள் கதை, எத்தனையோ லட்சம் பேர் வாழ்க்கையைக் கருக்கி சினிமா உலகம் மிளிர்வதைச் சிந்திக்க வைத்தது. தோழர் லெனினின் வாழ்க்கைச் சம்பவத்திலிருந்து அந்தக் கிராமத்துப் பெரியவரின் அறியாமை மட்டுமல்ல என்னுடைய அறியாமையும் சேர்ந்தே அகன்றது.

— புரட்சித்தூயன், தருமபுரி.

● நவம்பர் புரட்சி குறித்த தோழர் துரை. சண்முகத்தின் கவிதையில் ''கம்யூனிசத்தைச் சுமந்து பாருங்கள் அது மனித குலத்தின் பேறு'' எனும் வரிகளை மறக்க முடியவில்லை.

— நிர்மலா, திருச்சி.

● 'புர்ரட்சித் தலைவி' சிறப்புத் தலையங்கம் உச்சநீதி மன்ற லீலைகளை மிகச் சிறப்பாக அம்பலப்படுத்தியுள்ளது. நேரு காலத்தில் ராஜமுந்திரி ஊழல்; இந்திரா காலத்தில் நகர்வாலா ஊழல்; ராஜீவ் காலத்தில் போஃபர்ஸ் - பேஃர்பாக்ஸ் ஊழல்; நரசிம்மராவின் ஹவாலா ஊழல்; வாஜ்பேயி பெர்னாண்டசின் தெஹல்கா ஊழல்; அந்துலேயின் சிமெண்ட் பேர ஊழல்; சுக்லாவின் தொலைபேசி ஊழல்; லல்லுவின் மாட்டுத் தீவன ஊழல்; கருணாநிதியின் வீராணம் மற்றும் பூச்சி மருந்து ஊழல்; ஜெயா - சசி கும்பலின் சுடுகாட்டுக் கூரை ஊழல் முதல் வளர்ப்பு மகன் கல்யாண ஊழல் வரையிலான வகை வகையான ஊழல்கள்... இதுவரை எந்த அரசியல்வாதிக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது? அவ்வாறிருக்கும்போது ஜெயா மட்டும் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென எதிர்ப்பார்ப்பது 'பாமரத்தனம்' என்பதை, உச்சநீதி மன்றம் எடுப்பாக விளக்கியிருந்தால் ஊழல் கிரீடத்திற்கு மகுடம் வைத்தது போல் ஆகியிருக்கும்!

கண்களைக் குளமாக்கும் தோழர் தீபனுக்கான சிவப்பஞ்சலிக் கவிதைக்கிடையே 'எப்படிக் கிடைக்கும் அந்த இனிய ஏழு' கவிதை மூலம் பலநூறு தீபன்களை நிச்சயம் அணி வகுக்கச் செய்யும் என்பது திண்ணம்.

— பு.க. வாசகர் வட்டம், சிவகங்கை.

● புர்ரட்சித் தலைவி.... டான்சி வழக்கின் தீர்ப்பையும், அரசு ஊழியர்கள் வழக்கின் தீர்ப்பையும் ஒப்பிட்டு நம்நாட்டு நீதிமன்றம் பணம் படைத்தவனுக்கும், அதிகார வர்க்கத்திற்கும்தான் என்று புரிய வைத்தது சிறப்பான அம்சம்.

— துரை. திருநாவுக்கரசு, பரேலி, உ.பி.

● ''எப்படிக் கிடைக்கும் அந்த இனிய ஏழு'' கவிதையில் எனக்குப் பிடித்த வரிகள், ''பிறர்க்கெனத் தான் வாழும் அந்த மனிதர்களைப் பிரசவித்து ஊட்டி வளர்ப்பது, தாய்ப்பாசம் அல்ல, கம்யூனிசமே.''

— விஜயன், தஞ்சாவூர்.

● பொய் நாயகர்களின் நாற்காலிக் கனவுகள் கட்டுரை சினிமா என்ற மாயையில் ரசிகர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் பொய் நாயகர்களுக்கு தலையில் குட்டு வைப்பதுபோல் இருந்தது. ஒருநாள் உதவி இயக்குநரின் கதை படித்தபோது இப்படியும் ஒரு வாழ்க்கை தேவையா என்று கேட்க வைத்தது.

— நந்தனம் சந்திரசேகரன், திருச்சி.

● 'த.மு.எ.ச: கோமாளி வள்ளல்கள்' என்னும் செய்தியில் தங்கர்பச்சான் தனக்குத்தானே சொல்லிக் கொள்வதைப் போல ''மக்கள் கலைஞன்'' என்னும் தகுதி, சுயமாகச் சூட்டிக் கொள்வதல்ல. அத்தகுதிக்கு ஆசைப்படும் தங்கர் பச்சான் அதற்கேற்றாற்போல் அவரது படைப்புக்களையும், செயற்பாடுகளையும் புரட்சிகரமாக அமைத்துக் கொள்ளவேண்டும்.

— ருத்ரன், காவேரிப்பட்டினம்.

## தமிழ் மக்கள் இசை விழா கீழைக்காற்று விற்பனை அரங்கில் சிறப்புச் சலுகை விலையில் சில நூல்கள்...

□ பி. இரயாகரனின்

| | |
|---|---|
| ஆணாதிக்கமும் பெண்ணியமும்;<br>ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்;<br>புதிய வரவான ஆணாதிக்கமும் மார்க்சியமும் | மூன்று நூல்களும் 30% கழிவில் |

□ **மாவோ சே துங் மேற்கோள்கள்** - 30% கழிவில்

*மற்றும் சமூக அறிவிற்கான சகல துறை நூல்கள், தமிழ்நாட்டுப் பாடநூல் மலிவுவிலை நூல்கள், அகராதி, புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் வெளியீடுகள்*

**நல்ல நூல்களுடன் நமது சந்திப்பைத் தொடர்வோம்!**

### இந்த இதழுடன் (பிப்-04) முடியும் சந்தா எண்கள்

**55,778, 779, 782, 788, 790, 792, 797, 799, 805, 806, 807, 808, 810, 811, 823, 141, 229, 780,784, 785, 786, 789, 791, 793, 794, 795, 796, 798, 800, 801, 803, 804, 812, 824, 825, 857**

### மார்ச் இதழுடன் முடியும் சந்தா எண்கள்

**4, 116, 167, 182, 852, 343, 363, 443, 444, 445, 446, 447, 448, 449, 450, 451, 452, 453, 454, 455, 456, 457, 458, 459, 460, 694, 828, 831, 840**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிதாகச் சந்தா செலுத்துவோர், புதிய சந்தா என எழுதி தங்களது முழு முகவரியை அ.கு. என் (Pin Code) உள்ளிட்டுத் தெளிவாகக் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: 21
- குரல்: 8
- ஜனவரி-பிப்ரவரி 2004

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

தொலைபேசி: 044-23718706
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hot[illegible]l.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

அட்டை வடிவமைப்பு:
ஸ்பார்ட்டகஸ்

## *தமிழ் மக்கள் இசைவிழா:*

# துவளாதே தமிழகமே! போராடு!

தமிழ் மக்கள் இசைவிழாவிற்கு இது பதினொன்றாம் ஆண்டு. பார்ப்பன, ஆன்மீக இசைமுகாமுக்கும், களியாட்ட இசைக்கும் எதிரான மக்கள் இசை முகாமாகத் தமிழ் மக்கள் இசைவிழா கடந்த பத்தாண்டுகளில் தன்னை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது. தமிழறிஞர்களும் ஆய்வாளர்களும் பார்ப்பனக் கும்பல் நடத்தியுள்ள இந்த இசைக்களவை எமது இசைவிழாவில் ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியிருக்கிறார்கள், தேவைப்படுவது போராட்டம்தான். பார்ப்பனப் பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கும் இசைக் களவிற்கும் எதிரான போராட்டம்!

ஆனால் கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழகத்தில் நடைபெற்ற மக்கள் போராட்டங்கள் வேறு விதமானவை; தங்களுடைய வாழ்வுரிமையையும், தொழிற் சங்க உரிமைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், தொழிலாளர்கள் போன்ற பல்வேறு தரப்பினரும் நடத்திய அத்துணைப் போராட்டங்களும் ஜெ.அரசால் நசுக்கப்பட்டிருக்கின்றன; அநேகமாக எல்லாப் போராட்டங்களும் தோல்வியையே தழுவியிருக்கின்றன; தோல்வியால் துவண்டு, அடக்குமுறையால் நிலைகுலைந்து, செய்வது இன்னதென்று அறியாத கையறு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன அமைப்பு ரீதியாகத் திரண்ட வர்க்கங்கள். தம் கையிலிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய முன்னுரிமை.

விவசாயத்தையும் தமது வாழ்க்கையையும் சூறையாடிவரும் மறுகாலனியாக்கக் கொள்கைகளைப் பற்றி ஏதுமறியாத விவசாயிகளோ மவுனமாகக் கிராமங்களை விட்டுப் புலம்பெயர்கிறார்கள். எது சோறு போடுமோ அந்த மண், எங்கே வேலை கிடைக்குமோ அந்த மொழி, எத்தகைய வாழ்க்கை தம்மீது திணிக்கப்படுகிறதோ அதற்குப் பொருத்தமான பண்பாடு - இதுதான் இவர்களது வாழ்க்கை. தமது மொழி, தமது பண்பாடு ஆகியவை குறித்துச் சிந்திக்கவும் முடியாத நிலையில் இவர்களைச் சிறைப்படுத்தியிருக்கிறது அன்றாட வாழ்க்கைக்கான போராட்டம். அரசு மதுபானக் கடை வேலைக்குப் பரிதவிக்கும் இளைஞர்களுக்கும், வெளிநாட்டு வேலைக்காக உயிரையே பணயம் வைக்கத் துணிந்தவர்களுக்கும், முன்னேற்றத்தின் கடவுச்சீட்டாக ஆங்கிலத்தைக் கருதுவோருக்கும் மொழியுரிமை குறித்த பேச்சுக்கள் கவைக்குதவாத பிதற்றல்களாகத் தெரிகின்றன.

மறுகாலனியத் தாக்குதலின் விளைவாகத் தோன்றியுள்ள இந்தக் கலாச்சார வெற்றிடத்திற்குள் ஏகாதிபத்தியச் சீரழிவுகளும் பொறுக்கிக் கலாச்சாரமும் தடையின்றி உள்நுழைகின்றன. தோற்றுப் போய், போராடும் நம்பிக்கை இழந்து துவண்டு விழுந்த இதயத்தை வருடுவது போலக் கவ்வுகின்றன பார்ப்பன மத - மூடநம்பிக்கைகள்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தைப் புரிந்து கொள்ளவியலாத மடமையும், எதிர்க்கத் துணியாத கோழைத்தனமும், மீட்பவனை எதிர்நோக்கிக் காத்திருந்த கையறு நிலையும் கண்ணீரும்தான் தியாகய்யரின் இசையைத் தோற்றுவித்த மனவுணர்வுகள். சமஸ்கிருத ஆதிக்கத்தை மட்டுமல்ல, இந்த இசை தோற்றுவிக்கும் சரணாதி உணர்வையும் நாம் எதிர்க்கிறோம்; வெறுக்கிறோம்.

நமக்குத் தேவைப்படுவது போராட்டம்! நாம் காணவிரும்புவது தன் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள கம்பீரமாக எழுந்து நிற்கும் தமிழகம். வீரஞ்செறிந்த போராட்டங்கள் தமது கனலை இசையாய் வழங்குவதுண்டு. சோர்ந்து துவண்ட மக்களின் நெஞ்சில் நீறு பூத்த நெருப்பாய் உறங்கும் வெஞ்சினத்தை மூண்டெழச் செய்யும் ஆற்றலும் இசைக்கு உண்டு. இன்றைய சூழலில், இந்தத் தருணத்தில் இந்தப் பாத்திரத்தை ஆற்றுவதுதான் மக்களிசை.


இசைமரபை மீட்பதும், மக்களிசையைப் படைப்பதும் ஒன்றையொன்று முறையே பின்தொடரும் பணிகள் அல்ல. மக்களிசையால் உந்தப்படும் மக்கள் தங்கள் வாழ்வு உரிமையை மட்டுமின்றி தங்கள் மரபுரிமையையும் தக்க வைத்துக் கொள்வார்கள்.

வாழ்வுரிமையைத் தக்கவைத்துக் கொள்ளும் திறனற்ற மக்களும், எதிரியை இனம் காணத் தெரியாத சமூகமும் தன் மரபுரிமையை மீட்க முடியாது; சொந்த மரபு குறித்த பெருமித உணர்வை இழந்து அடிமை மோகத்தில் வீழ்ந்த சமூகம், தன் எதிர்கால விடுதலை குறித்துக் கனவும் காணமுடியாது. மறுகாலனியமும் பார்ப்பனப் பாசிசமும் இணைந்து தொடுக்கும் தாக்குதலை முறியடிக்கப் போர்ப்பறை முழக்குகிறது தமிழ் மக்கள் இசைவிழா.

**துவளாதே தமிழகமே... போராடு!**

படிப்பகம்

www.padippakam.com



## குஜராத்:

# இந்து வெறியர் தணிக்கை செய்யும் ஆவணப் படங்கள்

பேச்சு, எழுத்து, வெளியீட்டுச் சுதந்திரத்தை முதல் சுதந்திரம் என்று உலகெங்கும் சொல்வதுண்டு. உலகின் எல்லா நாடுகளுக்கும், எல்லாவிதமான சமூகங்களுக்கும் இந்தச் சுதந்திரம் ஒரே மாதிரியானதா, எதற்கும் கட்டுப்படாத ஒன்றா, முழுமுற்றானதா என்ற விவாதம் இருக்கட்டும், இன்று இந்தியாவில் சுதந்திரம் என்ற சொல்லே கேலி செய்யப்படும் ஒரு பொருளாக ஆக்கப்பட்டுவிட்டதை முதலில் கவனிப்போம். உலக வங்கியிடம் அனுமதி வாங்கிய பிறகே பட்ஜெட்டைப் போட முடியும் என்ற 'சுதந்திரம்' ஒருபுறம்; அரசுக்கும் மக்களுக்கும் சொந்தமான பொதுத் துறையை அந்நிய மூலதனத்துக்கு அடிமாட்டு விலைக்கு ஒப்படைக்க என்றே 'தேர்ந்தெடுக்கப்பட்ட' ஒரு மத்திய அமைச்சர் உள்ள 'சுதந்திரம்' இன்னொருபுறம். குஜராத் என்ற கொலைக்களத்தின் நாயகன் மோடி தேர்தல் என்ற மோசடி மூலம் மறுபடி முதலமைச்சராகின்ற தனிச்சிறப்பான 'சுதந்திரம்.' இது சொல்லக் கூசுகின்ற 'சுதந்திரம்'.

இதனிடையே மக்களும் சுதந்திரத்தின் தூதுவர்களும் பட்ட கொடுமைகளை ஒப்பிட்டுப் பார்த்தால்தான் நிலைமையின் பயங்கரம் புரியும். கடந்த ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் ஹபீப்தன்வீர் நாடகக்குழு தாக்கப்பட்டது; காரணம் - ஒரு நாடகத்தில் இந்துக் கடவுள்களைத் தரக்குறைவாக ஹபீப் சித்தரித்து விட்டாராம். அந்த நாடகம் எழுபதாண்டுகளாகவே கிராமப்புறங்களில் நடத்தப்பட்டுவரும் 'பொங்கா பண்டிட்' என்ற நாட்டுப்புறக் கூத்து நாடகம். இப்போது 25.1.04 அன்று சூரத் நகரில் தொடங்கிய ஓர் ஓவியக் காட்சியில் ஹுசைன் வரைந்து வைத்த ஓவியங்களை விசுவ இந்து பரிசத் மற்றும் பஜ்ரங்தள் குண்டர்கள் அடித்துச் சிதைத்து உருத்தெரியாமல் அழித்துவிட்டார்கள். காரணம் - 'துர்க்கை அம்மனை அவமதிக்கும் வகையில் அவரது ஓவியங்கள்' இருந்தனவாம். ஹுசைன் இரண்டாம் முறை தாக்கப்பட்டிருக்கிறார்.

அப்படியானால், வி.இ.ப.வைக் கேட்டுக் கொண்டுதான் நாடகம் எழுத வேண்டும்; தூரிகை எடுக்க வேண்டும்; பாட்டுப் பாட வேண்டும். அவர்கள் சொல்படிதான் பேச வேண்டும். அவர்களின் நம்பிக்கைகள் மீது கேள்வி எழுப்பினால், அவர்களை விமரிசனம் செய்தால் தனியே 'கவனிப்பா'ர்கள். எந்த எந்தக் கலைஞர்கள், பாடகர்கள், நாடக ஆசிரியர்கள், சினிமா / ஆவணப்பட இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், அரசியல் எழுத்தாளர்கள், பத்திரிக்கைகள், அமைப்புக்கள் - இந்துமதத்திற்கும், இந்துக்களுக்கும் எதிரிகள் என்று அவர்கள் கருத்து உருவாக்குகிறார்கள்; அவர்களை எதிர்ப்பதற்கு 'இந்துக்களை'த் தூண்டிவிட்டுச் சமூகத்தில் அதைப் பழக்கி விடுகிறார்கள்; அடிப்படை உரிமைகள் என்று சட்டத்தில் எழுதப்பட்டவற்றுக்கு வெளியே சட்டவிரோதமாகக் கை வைத்து மறிப்பதற்கு ஒரு கும்பலைத் திரட்டுகிறார்கள். இது அவர்களின் சுதந்திரம்.

ஆளுகின்ற வர்க்கங்களுக்கு ஏற்ற வகையில் சுதந்திரத்தை மறிப்பதற்குச் சட்டபூர்வமான அரசுத் தணிக்கை இருந்தாலும் எல்லாக் காலத்திலும் அது சரிப்பட்டு வருவதில்லை. எனவே, வெளியே சட்டப்புறம்பான தணிக்கைகளை அவை கையில் எடுக்கின்றன. பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல், குண்டர் படைகளை வைத்துச் செயல்படுத்திய சட்டவிரோத வழிமுறைகளைப் போலவே கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆர்.எஸ்.எஸ்.ஸின் பல்வேறு கரங்கள் மக்களை மறிக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

1988-இல் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் ஆவணப் படங்கள் பற்றிய கட்டுரை ஒன்றை *புதிய கலாச்சாரம்* வெளியிட்டது. 15 ஆண்டுகள் கழித்து அதே துறைமீது இப்போது மறுபடி இந்தியாவில் நிலவும் கடுமையான அடக்குமுறையை இங்கே பதிவு செய்கிறோம்.

●●●

கடந்த 2 ஆண்டுகளில் குஜராத்தில் இந்துமதவெறியின் கோரதாண்டவங்களைச் சந்தித்த, பரிசீலித்த எட்டு இயக்குனர்கள் தங்கள் கண்ணோட்டத்தில் அதைப் பிரதிபலித்து ஆவணப்படங்களைத் தயாரித்தார்கள். அவர்கள் அனைவருமே தமது படங்களை பல ஆயிரம் மக்கள் பார்க்க வேண்டும், 'மத நல்லிணக்கம்' நாடெங்கும் மறுபடி பூத்துக் குலுங்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஆனால் படம் எடுத்த பிறகு தணிக்கை அதிகாரிகளோடு அவர்கள் மல்லுக்கு நிற்க நேரிட்டது; அங்கீகாரச் சான்றிதழ்கள் மறுக்கப்பட்டன; அவர்கள் 'தனிப்பட்ட முறையில்' தனிக் காட்சிகள் மூலம் திரையிட்ட இடங்களில் எல்லாம் சங்க பரிவாரங்களால் தாக்கப்பட்டார்கள்; போலீசால் விரட்டப்பட்டார்கள். முதல் சுதந்திரம் என்பது இப்படியும் இருக்க முடியுமா? (பார்க்க: பெட்டிச் செய்திகள்).

இந்தியா முழுவதும் மக்களின் சிந்தனையைத் தங்களின் கட்டுக்குள் கொண்டு வர இந்துமதவெறிப் பாசிசச் சக்திகள் கடந்த ஐந்தாண்டுகளில் ஓரளவு வெற்றியும் பெற்று விட்டன. மத்தியிலும், மாநிலங்களிலும் ஆட்சிகள் மூலமாகவும், வெளியிலிருந்து 'குரங்குப் படைகள்' மூலமாக அழுத்தமும், நெருக்கடியும் கொடுப்பதன் மூலமாக அதைச் சாதித்துள்ளன. ''பாசிசம் ஆட்சியில் வந்துவிட்டதா? இன்னமும் ஜனநாயக வழிமுறைகளை நாம் பின்பற்ற முடிகிறதல்லவா?'' என்று கேட்டார் ஒரு நண்பர். பாசிஸ்டுகள் கூட திடுதிப்பென்று ஒரே நாளில் ஆட்சியில் ஏறி மொத்த அதிகாரத்தையும் பறிப்பதில்லை; தயாரிப்புக்களைச் சிறிது சிறிதாக ஓயாமல் செய்த பிறகுதான் 'மொத்த மாற்றத்தை' அறிவிக்கிறார்கள்.

**கடந்த ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் ஹபீப்தன்வீர் நாடகக் குழு தாக்கப்பட்டது; காரணம் — ஒரு நாடகத்தில் இந்துக் கடவுள்களைத் தரக்குறைவாக ஹபீப் சித்தரித்து விட்டாராம். அந்த நாடகம் எழுபதாண்டுகளாகவே கிராமப்புறங்களில் நடத்தப்பட்டு வரும் 'பொங்கா பண்டிட்' என்ற நாட்டுப்புறக் கூத்து நாடகம்.**

அந்தத் தயாரிப்புக்கள் - ஆரம்ப கட்டத்தில் ஏற்கெனவே உள்ள மக்களின் வாழ்க்கையின் வேர்களுக்குக்குக் கொள்ளி வைப்பதில் தொடங்குகின்றன. பல நூறு ஆண்டுகளாகச் சிறுகச் சிறுக எந்தெந்த ஜனநாயகச் சமூக மதிப்பீடுகளை மக்கள் வளர்த்தார்களோ அவற்றுக்கு வெந்நீர் ஊற்றுவது தான் அத்திருப்பணி; பண்பாடு, கலை, கலாச்சாரம், கலைஞர்களுக்கும் இது சேர்த்துத்தான். அது மக்களுக்கு வேறாகவும், கலைஞர்களுக்கு வேறாகவும் நடந்து கொள்ளாது.

பணச் செலவுமிக்க (காமிரா, கட்டமைப்பு, படி எடுத்தல்) ஊடகத்தை வைத்து ஓர் ஆவணப்படம் தயாரிக்கும்போது, முதலில் அது மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்றுதான் சமூக அக்கறை கொண்ட ஓர் இயக்குனர் ஆர்வப்படுகிறார். இதில் முதல் குறுக்கீடு - சென்சார் - தணிக்கை அதிகாரிகள். அடக்குமுறைகளின் காரணமாகப் பல இளம் இயக்குனர்கள் வருடக் கணக்கில் பல கோர்ட்டுகளின் படிகளில் ஏறி இறங்க வேண்டியுள்ளது.

அடுத்து, மக்களுக்குப் போகும் வழிமுறையான டி.வி. - தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை மூலமான விளம்பர / அறிவிப்புச் சாதன வசதிகள்; அரசின் டி.வி.யில் நுழைய முதலில் தணிக்கைச் சான்றிதழ் வேண்டும்; (ஏழுகடல், ஏழு மலை தாண்டி தீவை அடைந்த வீராதிவீரனைப் போலப் போய்ச் சேர்ந்தாலும் இரவு '11 மணிப் பிரிவில்தான்' திரையிடுவார்கள். ஆனந்த் பட்வர்த்தனின் பல படங்கள் இவ்வாறுதான் இருட்டில் தள்ளப்பட்டன.) தனியார் டி.வி.யில் என்றால் அவற்றின் சொந்தக்காரர்களின் நலன்களைப் பாதிக்காதபடி படங்கள் இருக்க வேண்டும்; மற்றும், சிபாரிசுகள் வேண்டும்.

அதற்கடுத்து, பணச்சந்தையின் ஆதிக்கம். தப்பித்தவறி ஏதேனும் நிறுவனம் படம் தயாரிக்கக் காசு கொடுத்தால் - ஆவணப்படத்தின் நோக்கத்தைப் பணம் என்ற

**சுப்ரதீப் சக்ரவர்த்தியின் ''கோத்ரா தக் - டெர்ரர் டிரெய்ல்'':** அக்டோபர் 2003-இல் இந்த குஜராத் பற்றிய ஆவணப்படத்தை அகமதாபாத்தில் அழைப்பாளர்களுக்கு மட்டும் காட்ட ஏற்பாடு செய்திருந்தார். படம் முடிந்து விவாதம் நடக்கையில் விசுவ இந்து பரிசத்தினர் எங்கிருந்தோ மோப்பம் பிடித்து வந்துவிட்டனர். சுப்ரதீபைச் சூழ்ந்துக் கொண்டு ''படம் எடுத்ததற்கு மன்னிப்புக் கேள்!'' என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். அத்துடன் நில்லாமல் குற்றவியல் போலீசைத் தூண்டி விட்டு அனுப்பினர். ''எங்கே அந்த சுப்ரதீப்? எங்கே அந்த சினிமாப் படம்?'' என்று போலீசு கூலிப் படை, படை எடுத்து வந்தது. அதற்குள் கையில் இருந்த பிரிண்டுகளுடன் சுப்ரதீப் நகரத்தை விட்டே ஓடித் தப்பிவிட்டார்.

''கோத்ரா தக்'' ஆவணப்படம் 27.2.2003-இல் நடந்த கோத்ரா ரயில் கொளுத்தப்பட்ட கலவரத்தை ஆராய்கிறது. கரசேவகர்களின் பேட்டிகள், மத்தியத் தடயவியல் சோதனைச் சாலையின் இயக்குனர் டாக்டர். வி.என். செகலின் நேர்ப்பேட்டி ஆகியவற்றை எடுத்து 'முசுலீம்களே காரணம்' என்ற சங்கப்பரிவாரின் பொய்களைத் திரைகிழித்துள்ளது, இப்படம்.

**கீதா சாவ்டா, ரமேஷ் பிம்பிள் இருவரும் சேர்ந்து எடுத்த ''ஆக்ரோஷ்'':** இது 20 நிமிடப் படம். பிப்ரவரி 2003-இல் சென்சாருக்குக் கொடுக்கப்பட்ட போது ஒரே வாரத்தில் தள்ளுபடி செய்து விட்டார்கள்: ''உங்கள் படம் சென்ற ஆண்டு குஜராத்தில் நடந்த வன்முறைச் சம்பவங்களை மக்களுக்கு மீண்டும் நினைவூட்டி விடும். தவிர, படம், அரசாங்கம் பற்றியும் போலீசைப் பற்றியும் மோசமாகக் காட்டுகிறது'' என்று காரணங்கள் சொல்லப்பட்டன. பிறகு, படத்தைத் தடையும் செய்தார்கள். மறுபரிசீலனைக் குழுவிலும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திலும் வேறு தீர்ப்பு கிடைக்கவில்லை; வேறு வழியில்லாமல், கீதா சாவ்டா மும்பை உயர்நீதி மன்றம் சென்று நீதி வருமென்று காத்திருக்கிறார்.


படிப்பகம்

www.padippakam.com

கௌஹார் ரேசாவின் இரு படங்கள்: குஜராத் பற்றி இவர் இரண்டு படங்கள் எடுத்திருக்கிறார். இவர் தில்லியைச் சேர்ந்த அறிவியல் ஆய்வு மற்றும் தொழில்துறை ஆய்வு நிறுவனத்தில் ஓர் விஞ்ஞானி. **"ஜூல் மதான் கே தௌர்மே(ன்)" (இருண்ட காலங்களில்)** என்ற இவரது முதல்படம் 1998 தேர்தலைப் பற்றியது; **"ஜூனூன்கே பட்தே கதம்" (தீய சக்திகள் வேட்டையாடும் தேசம்)** என்ற இரண்டாவது படம் குஜராத் படுகொலைகள் பற்றியது. தணிக்கையாளருடன் போய் மோதி மண்டை உடைக்க அவர் விரும்பவில்லை. முதல்படத்தை தற்போது முடப்பட்டு விட்ட டி.வி.ஐ. என்ற கம்பெனிக்கு எடுத்தார். அந்த டி.வி.யிலும் ஒரே ஒருமுறை மட்டுமே காட்டினார்கள்; அப்புறம் ஏறக்கட்டி விட்டார்கள். 'மதவெறிக்கு எதிரான' இந்த இரண்டு படங்களையுமே இளைய சமுதாயத்திடம் எடுத்துச் செல்ல விரும்பினார் ரேசா. போபாலிலும் மும்பையிலும் அவர் திரையிட்ட போது காவிப் படைகள் வந்து தடுத்தன. மும்பையில் வீடியோச் சுருளை போலீசு பறித்துச் சென்றது; "படத்திற்குத் தணிக்கைச் சான்றிதழ் பெறவில்லை" என்று காரணம் சொன்னது. தனிப்பட்ட முறையில் காட்டப்படும் காட்சிகளுக்குத் தணிக்கை தேவையில்லை என்று வாதாடினார் இயக்குனர்.

சுமா ஜோசனின் **"குஜராத் - இந்து ராஷ்டிரத்தின் ஒரு சோதனைச் சாலை"**: நரேந்திர மோடி மீண்டும் ஜெயித்து வந்த தேர்தலின்போது, அதற்கு 3 நாட்கள் முன்பு எடுத்தபடம். குஜராத் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஆனந்த் மாவட்டத்தின் 14 கிராமங்களை அவர் எடுத்துக் கொண்டார். இந்தியாவில் இப்படம் அதிகம் திரையிடப்படவேயில்லை. உத்திரப்பிரதேசத்தில் மட்டும் ஒருசில இடங்களில் கொண்டு சென்றார். ஜோசன் இப்படத்தைத் தணிக்கைக்கு அனுப்பவில்லை. அவரது முந்தைய படம் மும்பை 1992-93 கலவரம் பற்றிய "பம்பாய் ரத்த யாத்திரை" என்ற படம். கத்தரிக்கோல் வெட்டு விழாமல் அதைத் தணிக்கை செய்து பெற இரண்டு வருடங்கள் அவர் போராடினார். எங்கெங்கோ ஆதரவாய்க் கிடைத்த ஒரு சில நபர்களைத் திரட்டிக் கொண்டு அவர் போராடினார்.

துலாக்கோலால் அளந்து பார்க்கிறார்கள். ஒரு இயக்குனர் குறிப்பிட்டதைப் போல - "ஒரு பன்னாட்டு நிறுவனத்துக்கான விளம்பரப் படம் எடுப்போம்; காசு நிறைய கிடைக்கும்; பிறகு, அதே பணத்தை வைத்துப் பன்னாட்டுக் கம்பெனிகளை எதிர்க்கும் ஆவணப்படம் எடுப்போம். இதுதான் எங்கள் கேவலமான நிலைமை." சந்தையில் விலை போகாதது எதற்காகச் சந்தைப் பக்கம் வரவேண்டும்? - இதுதான் பண முதலைகளின் வாதம்.

இந்த மூன்று தடைகளையும் சந்திக்கின்ற இயக்குனர்களில் பலர் தொழில் முறைத்திறன் இல்லாதவர்கள்; ஒரு சிலர் தொழில்முறை பயின்றவர்கள் - இவர்களுக்கு முன்னால் பாசிச இந்து மதவெறிக் குண்டர் படையின் 'தணிக்கை', அடாவடித்தாக்குதலாக, சவாலாக வந்து நிற்கிறது; இவர்களே ஆட்சியிலும் வந்துவிட்டால் நிலைமை மிக மோசம். ஒரே ஒரு குஜராத் மோடி ஒருவகை மாதிரி என்றால், பல மாநிலங்களிலும் வாஜ்பாயி, அத்வானிகள், தொகாடியா, பால்தாக்கரே, ஜெயா - இராம. கோபாலன் கம்பைன்ஸ் என்று அக்கும்பல்களே ஆள்வதென்று நிரந்தரமாகி விட்டால் - இந்த இயக்குனர்களின் கதி என்ன ஆகும்? சரி, இவர்களிலேயே ஒரு சிலர் சமூக அக்கறை கொண்டவர்களாக நீடிக்கும் பட்சத்தில் சவால்களை எப்படி எதிர் கொள்வது?

அநேக இயக்குனர்கள் அரசுத் தணிக்கையைச் சட்டபூர்வமாக எதிர்த்துச் சண்டை போடுவது என்ற முடிவில் இருக்கிறார்கள்; அதற்கிடையே பெரும்பகுதி மக்களுக்கு - அவர்களின் பல சமூக அமைப்புக்கள் மூலம் - நேரடியாக எடுத்துச் செல்வது என்ற திட்டத்தையும் முன்மொழிகிறார்கள். ஓரளவு இது சரிதான். ஆனால், எங்கிருந்து தொடங்குவது என்று நாம் அவர்களைக் கேட்டால், இங்கிருந்து என்று தங்களைக் காட்டுகிறார்கள்.

> அப்படியானால், வி.இ.ப.வைக் கேட்டுக் கொண்டுதான் நாடகம் எழுத வேண்டும்; தூரிகை எடுக்க வேண்டும்; பாட்டுப் பாட வேண்டும். அவர்கள் சொல்படிதான் பேச வேண்டும். அவர்களின் நம்பிக்கைகள் மீது கேள்வி எழுப்பினால், அவர்களை விமரிசனம் செய்தால் தனியே 'கவனிப்பா'ர்கள்.

ஆனால், பிரச்சனையை ஆராய்ந்தால், யதார்த்தத்திலிருந்துதான் நாம் தொடங்க வேண்டும்; தொடங்க முடியும்.

✸ ஆவணப்படம்: அதிலும், கொக்கு, காக்கா, புலி, சிங்கம் என்று இயற்கைப் படக்காரர்களை நீக்கி விட்டால் எல்லாமே அரசியலைச் சேர்ந்து விடுகிறது. அப்படிப்பட்ட அரசியல் படங்களைத் தயாரிப்பதில், இயக்குவதில், மக்களுக்குக் கொண்டு செல்வதில் உள்ள சமூக / அரசியல் நோக்கத்தில் தெளிவு வேண்டும். இரண்டே சொற்களில் சொல்வதென்றால், கலை (படம்) யாருக்காக? பெருவாரியான உழைக்கும் மக்களுக்காக என்பதே சரியான பதிலாக இருக்கும்.


✸ முதல் கேள்வி தீர்மானிக்கப்பட்ட உடனே - அதற்கெதிரான தடைகளை - மக்கள் வாழ்க்கைக்கு எதிரான தடைகளைக் களைய எப்படிப் போராடுகிறோமோ, அதேபோலத்தான் போராட வேண்டும் என்ற தெளிவுடன் செயலில் இறங்க வேண்டும். அதிகாரபூர்வமற்ற தணிக்கைக்காரர்கள் (ஆர்.எஸ்.எஸ்.) தடிதூக்கினால், நாமும் மக்களைத் திரட்டிக் கொண்டு வீதியில் நேருக்கு நேர் மறித்துப் போராட வேண்டும்.

✸ முற்று முழுதான, எல்லாவற்றுக்கும் மேலான தனிநபர் வெளியீட்டு உரிமை, சுதந்திரம் போன்ற தேவையற்ற கற்பனைகள் தொடக்கப் புள்ளி அல்ல, இறுதிப் புள்ளியும் அல்ல. மக்களின் மீது ஆன்மீகத் தணிக்கை செய்யும் உரிமையை யாரும் பாசிசக் கும்பலுக்கு வழங்கவில்லை. எனவே அதை எதிர்க்க வேண்டும். இந்த விசயங்களை விளங்கிக் கொள்வதுதான் தொடக்கப்புள்ளி.

"தனிநபருக்குச் சுதந்திரம் உண்டு. எனவே, வெளியீட்டு உரிமையும், பேச்சு, எழுத்து, ஊடக உரிமையும் உண்டு. ஆனால், அதுவே மக்களின் ஒட்டுமொத்தச் சுதந்திரத்தை இலக்கு வைத்து அதனோடு இணக்கம் கொள்ளுமானால் அதை அனுமதிக்க முடியாது; அது முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும்" - இதுதான் முதலாளித்துவச் சுதந்திர விதி. இந்த முரண்பாடு கொண்ட விதிதான் முதலாளித்துவ ஜீவ நாடி.


படிப்பகம்

www.padippakam.com



மக்களின் சுதந்திரத்தோடு சம்பந்தப் பட்ட தனிநபர் உரிமையைப் பற்றிச் சிந்தித்து, அரசியல் செயல்ரீதியில் அதைப் போராடிப் பெறுவதொன்றே மாற்று வழி முறை. இந்த ஜனநாயகப் புரட்சிக்கு நேர் எதிரியே சங்கப்பரிவார பாசிசம்.

அடிப்படை வெளியீட்டு உரிமை என்று இந்தியச் சட்டத்தில் பிரிவு 19-ஐ முன்வைத்து வாதாடுகிறார்கள் சிலர். ''இது அரசின் பண்பாட்டு, ஒலிபரப்பு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தாது'' என்று அரசு வழக்குரைஞர்கள் பாசிச ராஜீவ் காலத்தில் பதில் சொன்னார்கள். இப்போது பதில் கிடைக்காது - உதைதான் கிடைக்கும். ஏனென்றால் இது பாசிச பா.ஜ.க. காலம்.

உரிமை, உரிமைச் சட்டங்கள் என்று மாயமான்களை நம்பி ஓடவேண்டாம். அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் சொன்னது நினைவிருக்கிறதா? ''அடிப்படை உரிமைகளுக்குத் தடை கூடாது என்பது சரியன்று'' என்றார் அம்பேத்கர். ''வரத்தைக் கொடுத்த கடவுளே பறித்துக் கொண்டதுபோல உள்ளதே அவர் கூற்று'' என்று ஒருவர் அண்மையில் ஒரு ஏட்டில் புலம்பியிருந்தார். அம்பேத்கர் பேசியது 1941, நவம்பர் 4, அரசியல் நிர்ணய சபை உரையில். அவர் என்ன சூழ்நிலையில் பேசினார் என்பது ஒருபுறமிருக்க, முற்றும் முழுதான உரிமை என்பது பற்றிய பிரமை அம்பேத்கருக்கு இல்லை என்பதை மட்டும் இங்கே கொள்ளலாம்.

அதேபோல, ''அடிப்படை உரிமைகளுக்கு நிலையான உள்ளடக்கம் ஏதுமில்லை. பெரும்பாலானவை காலியான பாத்திரங்களே. ஒவ்வொரு தலைமுறையும் தன்து அனுபவத்தின் அடிப்படையில் அவற்றை நிரப்பிக் கொள்ள வேண்டும்'' என்ற நீதிபதி மேத்யூவின் (1973 - 4 செக்சன் 225) சொற்களை ஆராய்ந்தால், அவை இந்தியச் சட்டங்களில் குறைகளை ஏற்றுத் தன்னிலை விளக்கமாக இருப்பதைப் பார்க்கலாம். எனவே, வெளியீட்டு உரிமை அடிப்படை உரிமைகளில் ஒன்று. மேத்யூவின் வார்த்தைகளில் சொன்னால், உள்ளே ஒன்றும் இல்லாத வெறுங்கலம். புனிதப் பார்ப்பனீயப் பூசையில் வைக்கப்பட்டுள்ள ஆளும் வர்க்க அலங்காரக் காலிப் பாத்திரங்களில் புதிதாக எதை, எப்படி, எதற்காக, ஏன் ஊற்ற வேண்டும்? இதுவே ஆவணப்படக் கலைஞர்களுக்கும் தொடக்கப்புள்ளியாக இருக்க வேண்டும்.

காலிப்பாத்திரங்களைத் தூக்கி எறிவதுதான் சரி; உழைக்கும் மக்களுக்கான ஆட்சி, அதிகாரத்தில் புதிய பாத்திரங்களை உருவாக்குவதுதான் சரி. அதற்கான படைப்பை இப்போதே தொடங்கி விடவேண்டும். நேரடித்தணிக்கை, சட்டப்புறம்பான மிரட்டல் போன்ற அடக்குமுறைகளுக்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை. கிரேக்க நாடகாசிரியர் சோபோகிளிசின் பிரபலமான சொற்கள் நினைவிருக்கிறதல்லவா? ''கொலை செய்பவன் யார்? பலியாள் யார்? அதைப் பற்றிப் பேசு, உரக்கப் பேசு!'' இப்போது பேசவில்லை யெனில், பின் எப்போதுமே பேச முடியாது!

*(ஆதாரம்: 1. புதிய கலாச்சாரம்: ஆக-செப்-அக். 1988; 2. ''அதிகாரபூர்வமற்ற தணிக்கையின் முரட்டுக் கரங்கள்'', கல்பனா சர்மா, தி இந்து, 7.12.2003.)*

● **குப்பண்ணன்**

**மும்பை ஆனந்த் பட்வர்த்தனின் 'போரும் அமைதியும்':** இவர் தணிக்கை அதிகாரிகளை எதிர்த்துப் போராடியே பிரபலமானவர்; ஒவ்வொரு படத்துக்குமே கோர்ட் சென்றார். தற்போது 'போரும் அமைதியும்' என்ற 3 மணி நேர ஆவணப்படத்துக்காகத் தணிக்கை அதிகாரிகளோடு மோதி, '22 வெட்டுக்கள்' என்று தொடங்கி 'வெட்டு ஒன்றும் இல்லை' என்று மாற்ற வைத்திருக்கிறார். சென்சார் செய்வதற்கு முன் அவர் ''போரும் அமைதியும்'' படத்தின் ஒரு தனிக் காட்சியை மும்பையில் ஏற்பாடு செய்தபோது, போலீசு புகுந்து தடுத்துவிட்டது.

**ராகேஷ் சர்மாவின் ''பின்னர் வந்த அதிர்வுகள்'':** 2001-இல் நடந்த குஜராத் பூகம்பம் பற்றியது. பூகம்பத்திற்குப் பிறகு ''நிவாரணம் மற்றும் மறுகுடியமர்த்துதல்'' என்ற பெயரில் நிகழ்ந்த கேலிக் கூத்துக்கள், சுரண்டல், இந்துமத வெறியின் பாரபட்சம் ஆகிய வற்றைப் படத்தில் தோலுரித்தார். இப்படத்திற்குத் தணிக்கை பெற்றாலும், புதிதாக குஜராத்பற்றி தான் தயாரிக்கும் 3 பகுதிகள் கொண்ட புதிய படம் அனுமதிக்கப்படுவது சிரமமே என்கிறார் அவர்.

**கே. ஸ்டாலின்** என்ற இயக்குனர் எடுத்த **''ஒரு வேலை நடக்கிறது''** என்ற குஜராத் பற்றிய படம்: ''தணிக்கை என்பதே, ஆதிக்கத்தில் உள்ள அரசியலைக் கேள்விக்குள்ளாக்கும் படத்திற்கு மட்டும்தான்'' என்கிறார் ஸ்டாலின். அவர் சொல்வது போல, குஜராத் பற்றி, கோத்ரா சம்பவம் பற்றி விசுவ இந்து பரிசத் தன் பிரச்சாரத்துக்காகப் பல படங்களை எடுத்துள்ளது; பாபரி மசூதி இடிப்பு பற்றிய அவர்களின் படங்களும் உலகறிந்த விசயம். அதையே பொதுமக்கள் பார்க்கும் காட்சிகள் என்றோ, தணிக்கை செய்யவில்லையே ஏன் என்றோ, மக்களின் நினைவுகளில் பழைய கோர சம்பவங்களை மீண்டும் எழச் செய்துவிடும் என்றோ போலீசு கேட்பதில்லை. அதேசமயம், ஆனந்தின் தணிக்கை செய்யப்பட்ட 'போரும் அமைதியும்' படத்தைத் திரையிட ஒரு நபர் கூட குஜராத்தில் முன்வருவதில்லை. காரணம் 'குரங்குப்படை' பற்றிய பீதியும், மரண பயமும்தான்.

www.padippakam.com

வரலாறு:

# ஒரு மன்னன் மனிதனான கதை

'தி லாஸ்ட் எம்ப்பரர்' எனும் ஹாலிவுட் திரைப்படம் சில ஆண்டு களுக்கு முன் வெளிவந்தது. சீனாவின் கடைசி மன்னனான பூ ஈ கம்யூனிச புரட்சியில் எப்படி தனது அதிகாரம், பெருமிதம், கௌரவம், வசதிகள் அனைத்தையும் இழந்து பரிதாபத்திற்குரிய மனிதனாக மாறினான் என்பதை மிகுந்த அனுதாபத்துடன் அந்தப் படம் சித்தரித்திருந்தது. ஆனால் உண்மை அதுவல்ல. தனது சுய சரிதையை ''மன்னனிலிருந்து குடிமகனை நோக்கி'' என்ற பெயரில் பூ ஈ எழுதியிருக்கிறார். அதில் கம்யூனிச அரசு தன்னை எப்படி மறுவார்ப்பு செய்தது, சொந்த வேலைகளுக்கு கூட மற்றவர்களை எதிர்பார்த்திருந்த தன்னை எப்படி போராடி மாற்றினார்கள், மக்களை நேசிப்பதற்காக தான் உதறிய மேட்டிமைப் பண்புகள், இறுதியில் தான் ஒரு குடிமகனாக விடுதலை செய்யப்பட்டது அனைத்தையும் பதிவு செய்திருக்கிறார். அந்த நூலை அடிப்படையாகக் கொண்டு அந்த புனரமைப்புப் போராட்டத்தைச் சுருக்கமாகத் தருகிறோம்.

இரண்டாம் உலகப்போரின் போது சீனாவின் வடகிழக்கில் ஜப்பானின் பொம்மை அரசராக இருந்தவர், போரில் ஜப்பான் தோல்வியடைந்த பிறகு ரசியாவிற்கு ஓடுகிறார். சோவியத் யூனியனிலிருந்து 1950-இல் கம்யூனிச சீனாவிற்கு கொண்டு வரப்படும் பூ ஈ 19 ஆண்டு மறுவார்ப்பு பயிற்சிக்குப் பிறகு சீன மக்கள் குடியரசால் விடுதலை செய்யப்படுகிறார்.

'மன்சுகுவோ' போர்க் குற்றவாளிக ளான நாங்கள் சோவியத் ருசியாவில் ஓர் ஓட்டலில் தங்கினோம். எங்களுக்கு நல்ல உணவு, தேநீர் வழங்கப்பட்டது. எங்களைக் கவனித்துக் கொள்ள சேவ கர்களும், செவிலிகளும், மருத்துவர் களும் இருந்தனர். பொழுதுபோக்குக் காக புத்தகங்கள், வானொலி, செய்தித்தாள் அனைத்தும் இருந்தன. எனக்கு முதலிலிருந்தே இந்த வாழ்க்கை பிடித்திருந்தது. நான் இங்கேயே தங்கிவிட அனுமதிகோரி சோவியத் அதிகாரிகளுக்கு மூன்று முறை கடிதம் அனுப்பியும் பதிலில்லை. என்னுடன் வந்த மற்றவர்கள் திரும்பிச் செல்லவே விரும்பினர்.

நாங்கள் சிறு சிறு வேலைகள் செய்யப் பணிக்கப்பட்டோம். அங்கேயே ஒரு சிறு காலி மனையில் மிளகு, தக்காளி, பீன்ஸ் அனைத்தும் வளர்த்தோம். அது ஒரு புது அனுபவ மாக இருந்தது. அதற்கு முக்கியக் காரணம் எனக்கு மிளகு மற்றும் தக்காளி உண்பது மிகவும் பிடிக்கும்.

அங்கிருந்த அதிகாரிகள் நாங்கள் படிப்பதற்கு 'லெனினிசத்தின் பிரச்சி னைகள்', 'சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி வரலாறு' போன்ற புத்தகங்கள் கொடுத்தனர். அவை எனக்குப் பயனற்றதாகத் தோன்றின. அவை எனக்குப் புரியவுமில்லை, அவற்றைப் புரிந்து கொள்ள நான் முய லவுமில்லை. மாறாக, என்னிடம் இருந்த நகைகள் எத்தனை நாட்க ளுக்குப் போதுமானது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

இப்படியான சிந்தனைகளால் என்னிடம் அடிப்படையில் எந்த மாற்றமும் தோன்றவில்லை. எனவே என் குற்றத்தை நான் ஒப்புக் கொள்ளவு மில்லை.

ஜூலை 31, 1950 சீனா திரும் பினேன். திரும்பும் வழிப்பயணத்தில் பீர், இனிப்பு எல்லாம் கொடுத்தார்கள். ஆனால் சீன மண்ணை மிதித்ததும் நான் கொல்லப்படுவேன் என்ற பயம் என்னைச் சூழ்ந்திருந்தது. 'கம்யூனிஸ்ட் டுகள்' நாகரிகமானவர்கள் என்று நான் நம்பவில்லை. என்னைப் பொறுத்த வரை அவர்கள் கொடிய மிருகங்கள். அன்றிரவு உறக்கம் வராது உலவிக் கொண்டிருந்தேன். அப்போது என் உற வினர் ஒருவர் 'சர்வாதிகாரம்' 'ஜனநா யகம்' என்பது பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தார். நான் கோபம் கொண்டு 'இன்னும் ஏன் சர்வாதிகாரம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாய்' என்று கத்தி, எவரேனும் ஜனநாயகம் தவறு என்று சொன்னால் அவர்களைக் கொன்று விடுவதாகக் கத்தினேன். சிறிது நேரம் கழித்து என்னை உணர்ந்து 'அப்படி ஏன் வெறித்துப் பார்க்கிறாய்? என்னைச் சுட்டுத்தான் கொல்வார்கள்' என்றேன்.

ஃபுன்ஜுனுக்கு வந்திறங்கினோம். சில சிப்பாய்கள் எங்களை ஒரு பெரிய சுவரால் சூழப்பட்ட இடத்துக்குள் அழைத்துச் சென்றனர். சிறிது நேரத்தில் அது சீனச் சிறை என்பதை நான் உணர்ந்தேன். நான் எனது உறவினர்க ளுடன் தங்க அனுமதிக்கப்பட்டேன். எங்களுக்குக் கம்பளம், மெத்தை மற்றும் துவைக்க உதவும் சாதனங்கள் கொடுக்கப்பட்டன. நாங்கள் ஆபத்தில் இல்லை என்ற உணர்வும் நம்பிக் கையும் வந்தது.

எங்களுக்கு நல்ல உணவு கொடுக் கப்பட்டது. நாங்கள் குற்றவாளிகள் போல நடத்தப்படவில்லை. எங்க ளுக்கு நல்ல உடையும், சிகரெட்டும் கூட வழங்கப்பட்டன. செய்தித்தாள் படித்தோம், வானொலி கேட்டோம், சீட்டு விளையாடினோம். மேலும் பல புத்தகங்கள் கொடுத்தனர்; படித்தோம். அப்புத்தகங்களில் இருந்த பல சொற்கள் எனக்குப் புதிதாய் இருந்தன. அதைவிடவும் புதிதாய் இருந்தது கைதி களைப் புத்தகம் படிக்கச் சொன்னது தான்.

என் குடும்பத்தினரிடமிருந்து நான் பிரிக்கப்பட்டேன். எனது மறுவார்ப்பில் மிக முக்கிய அம்சம் என்று அதைப் புரிந்து கொள்ள எனக்கு நிறைய நேரம் தேவைப்பட்டது. ஆனாலும் முழுவதும் புதிய மனிதர்களாய் இருந்த வேறு 'செல்'லில் தங்க முடியாது. கவர்னர் அனுமதியுடன் மீண்டும் பழைய இடத் துக்குப் போனேன். என்னை நானே கவ னித்துக் கொள்ளக் கற்றுக் கொள்ளு மாறு அவர் கூறினார். ஆனால், அப்படிச் செய்ய எனக்குத் துளியும் விருப்பமில்லை. எனது உறவினர் களைத் தினமும் உடற்பயிற்சியின் போது சந்திக்க முடிந்தது. எனது உற வினர் எனது துணி மற்றும் காலுறையைத் துவைத்துக் கொடுத்தார்.

இவ்வாறு துவைக்கும் பிரச்சினை முடிய, வேறொன்று தொடங்கியது. கடந்த 40 ஆண்டுகளில் எனது கம்பளமும், படுக்கையும் நான் சுற்றி வைத்ததில்லை. என் கால்கள் கூட நானாகக் கழுவிக் கொண்டதில்லை. ஒரு ஊசி, நூல், கத்தி போன்று எதுவுமே



படிப்பகம்

www.padippakam.com

என் கையால் தொட்டதில்லை. என்னை நானே கவனித்துக் கொள்ள மிகவும் சிரமப்பட்டேன்.

ஒருநாள் உடற்பயிற்சியின் போது கவர்னர் என்னை அழைத்து ''அனைவரது உடை போல்தான் உனக்கும் உடை கொடுக்கப்பட்டது! ஏன் உன்னுடையது அவர்களுடையதைப் போல் இல்லை?'' என்றார். சற்றே குனிந்து என் உடையைப் பார்த்தேன். மிகுந்த அழுக்குடன், ஒரு பை பாதி கிழிந்து தொங்கியது, ஒரு பொத்தான் இல்லாதிருந்தது, முட்டியில் மைக்கறை, காற்சட்டை ஒவ்வொன்றும் ஒரு நீளம். மேலும் என் காலணியில் (ஷு) பாதி லேஸ்தான் இருந்தது.

பிறரைப் பார்த்துக் கற்றுக் கொள்ளும்படி கவர்னர் கூறினார். பிறரிடம் இருக்கும் நல்லதைக் கற்றுக் கொள்ளாமல் நான் முன்னேற முடியாதெனக் கூறினார். அவர் மிகவும் மென்மையாகப் பேசியும் எனக்கு ஆத்திரம் பொங்கியது. என் வாழ்வில் முதன்முறையாக எனது இயலாமை பலர் முன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. என்னுடன் இருப்போர் இரவு படுக்கும் முன் உடைமாற்றி அதைத் தலையணையின் கீழ் வைப்பதைப் பார்த்தேன்; கற்றுக் கொண்டேன். கவர்னர் சொன்னதன் அர்த்தம் அப்போது விளங்கியது.

அக்டோபரில் ஹார்பினுக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கிருந்த முதன்மைக் காவல் அதிகாரி, இந்த அரசு எங்களைக் கொல்லாது என்றும், அது நாங்கள் எங்களை ஆராயவும், மறுவார்ப்பு செய்யவுமே சொல்கிறதென்றும் கூறினார். மேலும், மக்கள் அரசாங்கத்தில் பல குற்றவாளிகள் தங்களைப் பாதி மனிதர்களாக்கிக் கொள்ள முடியுமென்றார். கம்யூனிசத்தின் குறிக்கோள், உலகை மாற்றி அமைப்பதும் மனித குலத்தை மறுவார்ப்பு செய்வதுமே என்றார்.

இப்போது கவர்னர் பேசினார், அவர் பேச்சில் சில வார்த்தைகள் மட்டும் ஆழமாக நினைவில் நின்றன. ''நீங்கள் மரணம் பற்றியே சிந்திக்கிறீர்கள். இந்தத் தயாரிப்புகள் எல்லாமே மரணத்தின் ஒரு பகுதி என்று கருதுகிறீர்கள். ஏன் உங்களை நீங்களே இப்படிக் கேட்டுக் கொள்ளக் கூடாது? மக்கள் அரசு உங்களைக் கொல்வதானால் ஏன் படிக்கச் செய்கிறது?'' கம்யூனிஸ்டுகள் அர்த்தமற்றவற்றை எப்போதும் பேசுவதில்லை என்று புரிந்தது.

நான் என் தண்டனைக்கு முன் எனது சுயசரிதை எழுத முடிவுசெய்தேன். எனது குடும்பம், குழந்தைப் பருவம், ஜப்பானியர்களுடன் அரசியல் தொடர்பு என்று பல எழுதிவிட்டு, இறுதியில் இப்படி முடித்தேன்:

''மக்கள் துன்புறுவதைப் பார்த்து, ஏதும் செய்ய முடியாது போனதால் நான் மிகவும் துயரப்பட்டேன். சீனப் படைகள் போராடி வடகிழக்கிற்குள் முன்னேறி, பல காலங்களாக ஏங்கிய சர்வதேச முன்னேற்றத்தையும், சுதந்திரத்தையும் அடைய வேண்டுமென விரும்பினேன். 1945-ல் அது நிஜமானது.''



திருமணக் கோலத்தில் மன்னன் பூ ஈ.

படிப்பில் எனது முன்னேற்றம் திருப்திகரமானதாக இல்லை. பிற வேலைகளில் என்னை நிறுவுவதே ஒரே வழியாக இருந்தது. உணவு வாங்குவதும், தரை துடைப்பதுமே முக்கிய வேலைகள். ஒருநாள் என் வாழ்வில் முதன்முறையாக நான் உணவு பரிமாறினேன். அச்சமயத்தில் ஒருவரது தலையில் காய்கறி சூப்பைக் கொட்டிவிட்டேன். அதன் பின்னர் என் முறை வரும்போதெல்லாம், பிறரும் உதவி செய்தனர். இன்னும் என் துணிகளைத் துவைக்க நான் பழகவில்லை.

பின்னொரு நாள் நான் பதுக்கி வைத்திருந்த நகையெல்லாம் கவர்னர் மேசை மேல் வைத்து ஒப்படைத்தேன். ''இதையெல்லாம் திருப்பித்தர மிகவும் மனப் போராட்டம் இருந்ததா?'' என்று கேட்டார். ''திருப்பிக் கொடுத்ததனால் மன்னிக்கப்படுவேன் என்று நினைப்பதாகக்'' கூறினேன். ''நீ அரசனாக இருந்த காரணத்தினால் அப்படி நினைத்தாய்'' என்றார். நான் ''ஆம்'' என்றேன். அப்படி நான் நினைத்தது ஆச்சரியமாயில்லை என்றும் தவறை உணர்வோரையும், மறுவார்ப்புக்கு இணங்குவோரையும் கம்யூனிஸ்ட் கட்சி என்றுமே மன்னிக்கும் என்றார். ஏனெனில் மறுவார்ப்பை ஏற்று மாறிய மனிதர்கள் மிகவும் விலை மதிப்பற்றவர்கள். இந் நிகழ்ச்சி முடிந்து நான் என் அறைக்குத் திரும்பியதும் உடன் இருந்தோர் அனைவரும் என்னை மிகவும் பாராட்டினர். கம்யூனிஸ்டுகள் எப்போதும் உண்மையைப் பெரிதும் மதித்தனர்.

1952-ல் பெரிய கட்டிடத்திற்கு மாறினோம். நான் மிகவும் தீவிரமாகப் படிக்கத் துவங்கினேன். ஒரு நாள் நாலுமணி நேரப் படிப்பும், நாலு மணிநேர வேலையும் செய்தேன். ஒரு பென்சில் தொழிற்சாலைக்குப் பென்சில் வைக்கும் பெட்டிகள் செய்தோம். இதுவரை என் வாழ்வில் நான் ஒரு பென்சில் சீவியது கூடக் கிடையாது. பிறர் பல பெட்டிகள் செய்து முடித்த நேரத்தில் நான் ஒன்று கூட முடித்திருக்கவில்லை. அப்படி முடித்ததும் அது ஒரு பெட்டி போல் தோன்றவில்லை. ஒரு அதிகாரி அந்தப் பெட்டியைக் கையில் எடுத்து ''இதை ஏன் திறக்க முடியவில்லை'' ''என்ன செய்திருக்கிறாய்''? என்று கேட்டதும் பயமும், ஏமாற்றமும் கலந்து தோன்றின. அந்த அதிகாரி நான் செய்ததைத் தூக்கியெறிந்தார். நான் சென்று அதைத் திரும்ப எடுத்து வந்தேன். ''எங்கிருந்தாலும் கழிவுகள் கழிவுகள்தான்'' என்றார். என்னை இவ்வார்த்தைகள் மிகவும் ஆத்திரமூட்டின. ''நீ என்னிடம் வீரத்தைக் காட்டுகிறாய், எளியோரை மிரட்டுகிறாய், வலியோரைக் கண்டு அஞ்சுகிறாய்'' என்றேன். அவர் என்னை நோக்கி ''நீ உன்னை இன்னும் அரசனாகவே நினைத்துக் கொண்டிருக்கிறாய்'' என்றார்.

மறுநாள் என்னருகில் உட்கார்ந்து நான் செய்வதையே பார்த்துக் கொண்டி


படிப்பகம்

www.padippakam.com


ருந்தார். நான் அவருக்கு முதுகு காட்டித் திரும்பிக் கொண்டேன். அன்று பெட்டி செய்யும் வேலையில் சிறு முன்னேற்றம் தெரிந்தது; கழிவுகள் இல்லை. அன்று மாலை சிறை அதிகாரிகள் எங்களுக்கு இனிப்புகள் கொண்டு வந்தனர். அவை எங்கள் உழைப்பில் வாங்கியவை. வாழ்வில் முதன் முறையாக என் உழைப்பின் பலனை அனுபவித்தேன். என் பங்களிப்பு மிக அதிகமில்லை எனினும் அந்தப் பலகாரங்கள் மிகவும் இனித்தன, இதற்கு முன் எப்போதையும் விட.

1955: புது வருடம் துவங்கியது. அதைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன் என்று கவர்னர் கேட்டார். நான் தண்டனைக்குக் காத்திருப்பதாக மட்டுமே நினைப்பதாகக் கூறியது கேட்டு எனது அவநம்பிக்கையைக் கடிந்து கொண்டார். அவரது வார்த்தைகள் என்னை அமைதிப்படுத்தின, ஆனாலும் என்னில் இருந்த அவநம்பிக்கை இருட்டை அழிக்கவில்லை. அது மேலும் என்னை சுய-பச்சாதாபத்தில் வீழச் செய்தது.

ஒருநாள், ஓய்வு நேரத்தில் ஒரு புகைப்படக்காரர் எங்களைப் படம் பிடிக்க வந்தார். சிறைத் தோட்டத்தைப் படம் படித்து முடித்தவர். என்னைப் படம் எடுக்க வந்தார். அதுவரை என்னருகில் நின்று அங்கு நடந்த விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்த சிறை அதிகாரி, ''அவருடன் சேர்த்து என்னைப் படமெடுக்க வேண்டாம்'' என்று ஒதுங்கிச் சென்றார். உடனே என்னுடன் நின்றிருந்த எல்லோரும் விலகிச் சென்றனர்.

எங்களைப் பார்வையிட வந்த விடுதலை இராணுவ அதிகாரிகள் 'என் படிப்பைப்' பற்றி விசாரித்தனர். அவர்கள் என்னிடம் மிகவும் நட்புடன் நடந்து கொண்டனர். என்னைச் சிறிதும் சகித்துக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நினைத்த கம்யூனிஸ்டுகள் என்னை மனிதனாக நடத்தினர். ஆனால் என்னுடன் சிறையில் இருந்தோர் என்னருகில் நிற்கவும் விரும்பவில்லை. என்னை அவர்கள் மனிதனினும் குறைவாக மதித்தனர். அன்று ஓய்வு முடிந்து எங்களது இருப்பைப் பதிவு செய்யும் நேரத்தில் நான் தாமதமாகச் சென்றேன். லிட்டில் ஜு என்னைப் பார்த்து ''நீ எப்போதும் தாமதமாக வருகிறாய்'' என்று கத்தினார். ''நீ எப்போதும் உனக்காகப் பிறரைக் காக்க வைக்கிறாய். உனக்கு பிறரைப் பற்றிய குறைந்தபட்ச அக்கறை கூடக் கிடையாது. உனது சட்டைப் பொத்தான் கூட உனக்குச் சரியாய்ப் போடத் தெரியவில்லை'' என்று கூறினார்.

பின்னொரு நாள், நாங்கள் விளையாட்டு மைதானத்தைக் கூட்டிக் கொண்டிருந்தோம். மே தினத்தை முன்னிட்டு நிறைய செடிகள் பயிரிட முடிவு செய்யப்பட்டது. முதலில் நான் ஒரு பெரிய குழியில் மண்ணிட்டு மூடும் வேலை செய்தேன். என் கண்பார்வை மங்கிவிட்டதால் பாதுகாப்பு கருதி, செடிகள் நடும் வேலை செய்ய மாற்றப்பட்டேன். சிறிது நேரம் அந்த வேலை செய்துகொண்டிருந்தேன்.



மறுவார்ப்பு முகாமில் தோட்டவேலை செய்யும் பூ ஈ.

அப்போது செங் என்னிடம் வந்து மிகுந்த ஆத்திரத்துடன் என் கையிலிருந்த செடியைப் பிடுங்கி, 'என்ன செய்திருக்கிறாய்?' என்றார். என்னைக் களை பறிக்கச் சொன்னதாகக் கூறினேன். ''உன் கையிலிருப்பது களையா? அவை அனைத்தும் மலர்கள் என்பதைக் கூடப் பார்க்க உன்னால் முடியவில்லையா?'' என்றார். அவர்முன் நான் தலைகுனிந்து நின்றேன். அங்கிருந்த அனைத்து மலர்களும், களைகளும் ஒரு நொடியில் காணாமல் போய்விடக் கூடாதா என்று மனம் விரும்பியது. ''நீ உண்மையிலேயே உபயோகமற்றவன்'' என்று கூறிச் சென்றார். வார்டர்சியங் வந்து எனக்குக் களை பறிக்கக் கற்றுத் தருமாறு செங்கிடம் கூறினார். உடனே செங் ''மலருக்கும் களைக்கும் வித்தியாசம் தெரியாத மனிதர்கள் கூட இன்னும் இருப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை'' என்று கூறினார்.

ஒருநாள் மீண்டும் என் மூக்குக்கண்ணாடி உடைந்தது. மிகுந்த தயக்கத்துடன், தணிந்த குரலில், பிக்லீயிடம் சரி செய்து தருமாறு கேட்டேன். உனக்கு இன்னும் நான் சேவை செய்து கொண்டிருக்க வேண்டுமா என்று கத்தினான். இதுநாள் வரை உனக்கு எல்லோரும் சேவை செய்தது போதாதா என்று கேட்டவுடன் அவமானத்தால் என் தலையைச் சுவற்றில் முட்டிக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது.

என் கண்ணாடியைச் சரி செய்யவும், மெத்தை, கம்பளம் தைக்கவும் பிறர் எனக்கு உதவினர். இந்த உதவிகள் இல்லையென்றால் நான் நாள் முழுவதும் இதிலேயே கழித்திருப்பேன். இந்த உதவிகளெல்லாம் என்னில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும் பொருட்டே செய்யப்பட்டாலும், இந்த உதவிகளுக்கும் எனது மறுவார்ப்


படிப்பகம்

www.padippakam.com

புக்கும் எந்த ஒரு தொடர்பையும் என்னால் நினைத்துப் பார்க்க முடிய வில்லை. இவ்வுதவிகள் என் திறமை யின்மையையே பறைசாற்றின. என்னைப் பற்றிய விமரிசனங்கள் எனது காயங்களைத் திறந்து வலி உண்டாக்கு வதாகவே இருந்தன. கம்யூனிஸ்ட் கட்சியும், மக்கள் அரசும் என்னை உயிர் வாழ அனுமதித்தாலும் இந்தச் சமூகம் என்னைப் பொறுத்துக் கொள்ளாது. நான், அடித்துத் துன்புறுத்தப்படாவிட் டாலும் மக்கள் என் மீது காறி உமிழ்வர்.

பல நாள் மனப் போராட்டம், துன்பம் அனுபவித்த பிறகு - மாற்றம் என்பது என்னைப் பொறுத்தது, மற்றவர்கள் என்னை நடத்தும் முறையில் இல்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஒரு ஞாயிறன்று நான் துவைத்து முடித்து ஓய்வுக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். படிக்கப் புத்தகம் எடுத்துக் கொண்டு இருந்தபோது, இருவர் பேசுவது கேட்டது.

''நீ டென்னிஸ் விளையாடுவாயா?''

''எனக்குத் தெரியாது, ஆனால் பூ ஈ விளையாடுவார். நீ அவரைக் கேள்.''

''அவருக்கு அவகாசம் இருக்காது. அவர் எப்போது துணி துவைத்து முடிப்பார் என்று யாருக்கும் தெரியாது.''

''இல்லை. இப்போது துரிதமாவே செய்கிறார்.''

''நான் நம்பவில்லை.''

— இருவரும் மாறிமாறிப் பேசிக் கொண்டிருந்தனர். இது மிகவும் கோப மூட்டியது. என்னால் விளையாட முடியு மெனக் காண்பித்துக் கொள்வதைவிட, நான் துவைத்து முடித்துவிட்டேன் என்று அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விளையாடத் துவங் கினேன். விளையாடி முடித்ததும் கவர்னர் வந்து நான் இன்று நல்ல முன்னேற்றம் அடைந்ததாகவும், துவைக்கப் பழகியதால், ஓய்வு நேரம் பிறரைப் போல் எனக்கும் கிடைக்கு மென்றும் கூறினார். அவர் மேலும், ''இரண்டாவது உலகப்போர் மன்ன னான உன்னைக் கைதியாக மாற்றியது. தற்போது உன் மனதில் ஒரு பெரிய யுத்தம், ஒரு மன்னன் தொழிலாளி யாகும் யுத்தம் நடந்துகொண்டிருக்கி றது. மன்னன் என்பவன் யாரென்று நீ புரிந்து கொண்டுவிட்டாய். ஆனாலும் யுத்தம் இன்னும் முடியவில்லை, நீ இன்னும் உன்னை மற்றவர்களுக்குச் சமமாக நினைக்கவில்லை. நீ இன்னும் நன்றாக உன்னைப் புரிந்து கொள்ள வேண்டும்'' என்றார்.

துப்புரவுப் பணிகள் முடித்துத் திரும் பிய நாளன்று, அன்றாடப் பணிகளைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளும் நபர் ''நீ கைகழுவிவிட்டுக் குழாயை மூடவில்லை. நீர் வீணாகிக் கொண்டி ருக்கிறது. இது திரும்ப நடக்காமல் பார்த்துக் கொள்'' என்றார். உடனே பிக் லீ ''நீ இன்னும் அரசனாகவே நடந்து கொள்கிறாய், கதவு திறக்கும்போது கூட கைப்பிடியை உன் கையால் தொடுவ தில்லை, ஒரு தாள் கொண்டு பிடித்துத் திறக்கிறாய். அது அழுக்கு என்று நினைக்கிறாய். இன்னும், ஏன் உன் மன அழுக்கு மறையவில்லை. நீ இன்னும் உன்னை எங்கள் எல்லோரையும் விடப் பெரியவனாகக் கருதுகிறாய்'' என்று

**ஆனால் இன்று, எனக்குச் சிறப்பு மன்னிப்பு வழங்கப்பட்ட பிறகு, முதன் முறையாக, முழுமையாக என் வாழ்வில் 'மனிதன்' என்பதன் அர்த்தம் புரிகிறது. இன்றுதான் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மறுவார்ப்பு முறைகள் மூலம் அந்த மந்திர வார்த்தைக்குப் பொருள் புரிந்தது. நான் உண்மையான மனிதனானேன்.**

குற்றம் சாட்டினான். அப்படி எந்த உணர்வும் என்னில் இல்லை, ஆனாலும் என்னைப் பற்றிய சந்தேகங்கள் எனக்கே இருந்ததால் என்னால் மறுத்துப் பேச முடியவில்லை.

நான் என்னை மிகவும் உயர்ந்தவ னாக மதிப்பிட்டிருந்தேன். ஒரு நாள் எங்களது மாற்றங்கள், சிந்தனைகள் பற்றிய விவாதம் வந்தபோது இதை உணர்ந்தேன். என் முறை வந்தபோது என்னில் நிகழ்ந்த மாற்றங்கள் பற்றிக் கூறினேன். அப்போது ஒருவர் கேட்டார் ''உன்னைப் போன்ற பின்னணியிலி ருந்து வரும் ஒருவருக்கு ஜப்பானிய ஏகாதிபத்தியத்துடன் நெருங்கிய தொடர்பிருக்க வேண்டும். இன்றளவும் உனது தனிப்பட்ட சிந்தனையிலும், உணர்விலும் அந்த எண்ணங்கள் உனக்கு இருக்கும். ஏன் அதை வெளிப் படுத்தவில்லை'' என்று கேட்டார்.

''ஜப்பானியர்களைப் பொறுத்த அளவில் எனக்கு வெறுப்பு மட்டுமே உள்ளது. நீங்கள் சொன்னதை நான் மறுக்கிறேன்'' என்றேன்.

கோபம் கொண்ட அவர் ''அதை ஏன் கொஞ்சம் பண்பாகச் சொல்லக் கூடாது; நீ இன்னும் மிகப் பெரியவன் என்ற எண்ணம் உனக்கு இருக்கிறது'' என்று கூற அந்த விவாதம் வளர்ந்து கொண்டே போனது. ''நான் ஜப்பா னுடன் தொடர்பு வைத்திருந்த காலத்தில், நான் டோக்கியோவுக்குப் போகுமுன்பு அவர்கள் எனக்கு மூன்று மில்லியன் யென் (Yen) கொடுத்ததா கவும், அதை நான் இன்றுவரை மறைத்து விட்டதாகவும்'' சாடினார்.

இப்படியாகப் பல வேளைகளில் என்னையும் என் மாற்றங்களையும் என்னுடன் இருந்தோர் ஏற்க மறுத்தனர். அப்படிப்பட்ட ஒவ்வொரு முறையும் நான் எனது தவறான பழைய வாழ்வை எண்ணி மிகவும் வருந்தினேன். வெளி நாட்டிலிருந்து நாய்கள் வாங்கி, அவற் றுக்குத் தீனி வாங்கி, பராமரிப்புக்கு மருத்துவர்கள் அமர்த்தி, அவர்களுக்கு அளவிலா பொன்னும், பொருளும் தந்திருக்கிறேன். நோய் கொண்ட ஒரு மனிதனுக்காகக்கூட நான் அவ்வளவு கவலை கொண்டதில்லை, எனவே இன்று நான் இவ்வளவு மாற்றம் அடைந்தும் என்னைச் சுற்றியிருப்போர் என்னை ஏற்கவில்லை.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒன்பது, செப் 17-ஆம் நாள் பிறந்து 54 ஆண்டுகளுக்குப் பிறகு என் தாய்நாடு என்னை மனிதனாக்கிய நாள். உழைக்கும் மக்களுக்காக அவர்களே போராடி, அவர்கள்தம் அரசை நிர்மா ணித்து, அந்த அரசு என்னைக் குடிமக னாக ஏற்ற நாள். கம்யூனிசம் வெற்றி கண்ட நாள். எனது சிறப்பு மன்னிப்பு அறிக்கை வாசித்து முடிக்கப்படுமுன் என் கண்கள் குளமாயின.

இந்தச் சிலிர்ப்பான நிமிடங்களை அனுபவிக்க நான் கடந்து வந்த பாதை யினைச் சற்றே நினைத்துப் பார்க்கிறேன். அந்த வலியெல்லாம் இந்த நொடியில் மறந்து போகிறது. இந்தச் சிறப்பு மன்னிப்பு, பலருக்குத் தங்கள் குடும்பத்தைச் சேரும் ஒரு வாய்ப்பாக அமையவிருந்தது. என் குடும்பத்தினர் யாரும் உயிருடன் இருப் பினும் இம்மக்களைப் போல என்னைப் புரிந்து கொண்டிருக்க முடியாது. இவர் களுக்கு முன்னால் எனக்குப் பரிச்சய மான எவரும் 'உண்மையான' மனித னாவது எப்படி என்று கற்றுக் கொடுத்தி ருக்க முடியாது. இங்கிருந்து விடுதலை யாவது, உண்மையையும் ஒளியையும் பெற்று உலகைப் புரிந்துகொள்ளும் விடுதலையாகவே நான் கருதுகிறேன்.

• மேகலை



படிப்பகம்

www.padippakam.com

# உள்ள'தை' சொல்லுகிறேன்

■ பழைய நினைப்பில் பழகிய களிப்பில்
நீ அனுப்பிய பொங்கல் வாழ்த்தொன்றை
அஞ்சலில் அடைந்தேன்.
''உள்ளம் மகிழ்ச்சியில் பொங்குக'' என
உன்ன தை சொல்லியிருந்தாய்
உள்ள நிலைமை விளக்கி
என்ன தை எழுதுகிறேன்
ஏறெடுப்பாய் இனிய நண்ப!

■ பொங்கல் வாழ்த்துக் கவிஞர்கள்
புற உலகை மறைப்பதனால்
கரும்பு போட்டுச் சக்கையான
எங்கள் ஊர் விவரங்களைக்
கண்டுணர்ந்து சொல் நீயும்,
வாழ்க்கை இங்கு
கன்னலா? இன்னலா?

■ நீயும் அறிவாய்!
கல்லாய்ச்சமைந்த சிற்பங்களிலும்
ஏதாவது ஒரு வேலை செய்தபடியே
இருக்கிறார்கள் எங்கள் ஊர் மக்கள்.
இருந்தாலும் அந்தக்காலத்தில்
புல்லரிசிக்காகப் போட்டிபோட்டு
எறும்புகளிடம் தோற்றது
மக்கள் வறுமை!
இதுவா கொடுமை?
இல்லை இல்லை!

■ குழந்தைகளைத் தள்ளிவைத்து
குறுவைச்சம்பா நெஞ்சணைத்து
நெற்றிமணிக் கதிரறுக்க நினைத்து
வரும் சூரியனும்
ஒற்றை விவசாயி உழைப்பின் முன்
தோற்றுப் போய்
மேற்கே நாணிச்சிவந்து நழுவும்.
பொழுதும் உழைத்துவிட்டுத்
தொழுதுநின்று கூலிவாங்கி
பிய்த்துப் பிராய்ந்து
அரிசி உலையேற
பீர்க்கம் பூத்துவிடும்
இதுவா கொடுமை?
இல்லை இல்லை!

■ மார்கழி பிறந்தாலே
எங்கள் ஊரை மயக்குவது
கண்களல்ல.
மாயவரத்துக் கருவாடு.
தெருவோரம் கூறுகட்டி விற்கும்
அந்தக் கிழவியைவிட
கருவாடு இளமையெனக்
கண்டவர்கள் சொல்லலாம்
ஏவாரம் முடிந்து சில்லறையை
இடுப்பில் செருகி
குதிகால் ஊன்ற முடியாமல்
குலுங்கிக் குலுங்கி
தடி ஊனவும் முடியாமல்



தெருநாய்கள் வம்பிழுக்க
கால்கள் நடுங்கும்;
தண்ணிச் சோறில் பசியாற கை நடுங்கும்.
ஓய்வெடுக்கும் வயதில் உழைப்பின் இளமை காட்டி
சந்தைக்குப் பயணமாகி காலைப் பனியில்
அவள் கமறி இருமுவாளே!
இதுவா கொடுமை?
இல்லை இல்லை!

■ பின்னிரவின் பெருங்குளிர் தாங்காமல்
சூரியன் வந்தும் தாமரை இதழ்விரியத் தாமதமாகும்.
பனியின் திமிரடக்கிக் கோணியில்
குவித்துக் கட்டியதுபோல்
கணீரென்று குரலெடுத்துத் தப்பாமல்
வருவான் உப்புக்காரன்.
கெண்டைக்கால் நரம்புகள் மிதிவண்டி உறுப்பாகி
மேலே கிளர்ந்து வர உட்கிராமம் எல்லாம்
அவன் உப்பு அளந்தால்தான்.
அறுப்பு முடிந்தபின்னே அங்கங்கே நெல்சேரும்
என்ற எதிர்பார்ப்பில்
ஒரு மூட்டை உப்பை
உருட்டுவது பெரிதல்ல
வெறும் வயிற்றைச் சுமந்தபடி
வெண்கலக் குரலெழுப்புவானே
இதுவா கொடுமை!
இல்லை இல்லை

■ வேறெது என்று கேட்கிறாயா?
கருக்கரிவாளை விலாவில்
சொறிந்தபடியே
நலம் விசாரிக்கும் விவசாயி
கருவாட்டைக் கூறு கட்டியபடியே
என் மகளை விசாரிக்கும் பாட்டி,
உப்பளந்தபடியே வாங்க தம்பி என
வாஞ்சையோடு உறவாடும்
உப்புக்காரர்.
இப்படி வேலையின் கூடவே
வெளிப்பட்ட நபர்களெல்லாம்
மூளியாய்ப் போன சிற்பங்களாய்
மூலையில் குந்தியபடி
''வேலயே இல்ல தம்பி
ஊர்ல வேலயே இல்லாம
போயிடுச்சு'' என
வெம்பிடும் கொடுமை
அல்லவா கொடுமை!
வேலை இல்லாக்
கொடுமையை விவரிக்க
வார்த்தை உள்ளதா உன்னிடம்?

■ இனியும் தை பிறந்தால் வழிபிறக்கும்
என்ற தப்புக் கணக்கு செல்லாது
உலகமயத்தின் முகத்தில்
உதை ஒன்று பிறக்காமல்
உழைக்கும் மக்களின்
வாழ்க்கை விடியாது
என்றசேதியை எல்லோரிடத்திலும்
எடுத்துச் செல்வாய் விரைவாக!

● துரை. சண்முகம்


படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கை:

# நீங்கள் அறியாத செவிலியர்

'அன்னை' தெரசா, 'பாபா' ஆப்தே - இவர்களெல்லாம் உலகம் போற்றும் உத்தமர்களாகப் பாராட்டிச் சீராட்டி, 'புனிதர்', 'மகாத்மா' என்றெல்லாம் மதித்து வழங்கப்படுகிறார்கள். காரணம், அவர்கள் துறவிகள். தொண்டு நிறுவனங்களை நடத்தி அதிகாரத்தில் இருப்பவர்களின், அவர்களின் செய்தி ஊடகத்தின் கவனத்தை ஈர்க்கிறார்கள்.

ஆனால், தெரசா, ஆப்தே போன்றவர்களைவிட எந்த வகையிலும் குறைவில்லாத சமூகத் தொண்டு புரிபவர்கள் செவிலியர்கள். துறவிகள் என்ற பெயரில் சமூகத்துக்கு மேலே நின்று கொண்டு சேவை செய்வதால் அது தொண்டாக மதிக்கப்படுகிறது. ஆனால், சமூகத்தின் ஓர் அங்கமாக, குடும்பத்தோடு வாழ்ந்து கொண்டு சேவை புரியும் செவிலியர்களின் பணி ஒரு தொண்டாக மதிக்கப்படுவதில்லை.

ஒரு பொறியாளரையோ, கணினி வல்லுனரையோ, ஏன், ஒரு மருத்துவரையோ மதிக்கும் அளவுக்கு ஒரு செவிலியரை இந்தச் சமூகம் மதிப்பதில்லை. இத்தனைக்கும் படிப்பு, பயிற்சி, பணம், அனுபவம் எதுவுமின்றி செவிலியர் வேலைக்கு யாரும் வந்துவிடுவதில்லை. ''டாக்டர்கள்'' மருத்துவக் கல்வி பெற்று மருத்துவராகிறார்கள்; செவிலியர்கள் இணை அல்லது துணை மருத்துவக் கல்வி கற்றுத்தான் பணிக்கு வருகிறார்கள்.

இதிலும் 2 ஆண்டுப் பட்டயப்படிப்பு, மூன்றரை ஆண்டு பட்டப்படிப்பு மேலும் ஒரு 2 ஆண்டு முதுகலைப் பட்டப்படிப்பு ஆகியவை உண்டு. தனியார் நடத்தும் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகளில் கல்லூரிக் கட்டணம், உணவு, விடுதிக் கட்டணம் என்று ஆயிரக்கணக்கில் பிடுங்கிக் கொள்கிறார்கள். முதுகலைப் பட்டப்படிப்புக்கு மேலும் சில இலட்சங்கள் செலவழிக்க வேண்டும். செவிலியர் படிப்பு முடிந்ததும் தனியார் அல்லது அரசு மருத்துவமனைகளில் நிச்சயம் வேலை கிடைத்துவிடும் என்ற நிலை இருப்பதால் இந்த அளவு செலவு செய்வதற்குப் பலரும் முன்வருகிறார்கள்.

மற்றபிற படிப்புக்களைப் போல ''தியரி'' பாடம் படிப்பது இருக்கும் அதேசமயம் நடைமுறைப் பயிற்சி கூடுதலாகவே உள்ளது. மனவியல் ரீதியிலான ஆலோசனைகள், பயிற்சிகள் அதிக அளவில் தரப்படுகின்றன. சமூகத்திலும் மற்ற தொழில்களிலும் காணப்படும் கோபம், ஆத்திரம், பொறாமை, சகிப்புத்தன்மை இல்லாமை, போன்றவை தவிர்க்கவும் அன்பு, பாசம், கருணை, பொறுப்பு ஆகியவற்றை வளர்ந்துக் கொள்ளவும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

ஆரம்பத்திலேயே அனைத்து மாணவ, மாணவியருக்கும் கலந்தாய்வு நடத்துகிறார்கள். அப்போது நோயாளிகளுக்குப் படுக்கையில் செய்ய வேண்டிய பணிவிடை, மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள், அவர்களிடம் முகம் சுழிக்காமல் அன்பாக நடந்துகொள்ளும் முறை, நோயாளிகளோடு உடனிருப்பவரிடம் நடந்து கொள்ளும் முறை போன்ற அனைத்திலும் ஆலோசனைகள் தரப்படுகின்றன. இதனால் செவிலியர்களுக்குரிய பணிகள் எதுவானாலும் செய்வதற்கு மனதளவில் தயாராகிறார்கள்.

செவிலியர் என்ற முறையில், மேம்போக்காகப் பார்ப்பவர்களுக்கு ஒரு சில வேலைகள் மட்டுமே செய்வதாகத் தெரியும். ஆனால், உண்மையில், பல வேலைகள் இடப்படுகின்றன. படுக்கை தயார்செய்வது, படுத்த படுக்கையாக உள்ள நோயாளிகளுக்கு உடம்பைத் துடைத்து விடுவது, பல் துலக்கிவிடுவது, தலைவாரிவிடுதல், நகம் கத்தரிப்பது, உணவு ஊட்டிவிடுவது, பால், உணவு மற்றும் மருந்து ஆகியவை பட்டியல் முறையிலும் நேரத்துக்கும் தருவது. இவை தவிர, இரத்த அழுத்தம், உடல் வெப்பம் போன்ற விவரங்களைச் சேகரித்து மருத்துவ அறிக்கை எழுத வேண்டும்; ஊசிபோட வேண்டும்; சொட்டு மருந்து செலுத்த வேண்டும்; காயம் - புண்ணைச் சுத்தம் செய்து புதுக்கட்டுப் போடவேண்டும்; அறுவைச் சிகிச்சையின்போது உடனிருந்து மருத்துவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும்.

**பெரிய அரசு மருத்துவமனைகளில் 200 குழந்தைகளுக்கு 2 மணி நேரத்தில் ஊசி போட்டு முடிக்க வேண்டும் என்று இயந்திரத்தனமான வேலை கொடுக்கப்படுகிறது. அதேபோல ஒரு நேரத்தில் 18 முதல் 20 பிரசவங்கள் வரை கவனிக்க இரண்டு செவிலியர்களும் ஒரு மருத்துவரும்தான் ஒதுக்கப்படுகிறார்கள்.**

பாரிசவாயு, முதுகுத்தண்டுப் பாதிப்பு போன்ற நோய்களால் அவதிப்படும் நோயாளிகளைக் குளிப்பாட்டுவது, மலம், சிறுநீர், கழிவுகளை அகற்றுவது, பிரசவமான பெண்களின் கழிவுகளை அகற்றுவது உட்பட பல பணிகளை அருவெறுப்பின்றி செவிலியர்கள் செய்யவேண்டும். 'ஆயாக்கள்' இந்த வேலைகளைச் செய்வதற்கென்று இருந்த போதிலும், படிக்கும்போது பயிற்சியிலும், பின்னர் அவசியமான நேரங்களிலும் செவிலியர்களே செய்கின்றனர்.

பல நடுத்தர, சிறிய மருத்துவ மனைகளில் செவிலியர்கள் தம் வேலைக்குரிய பணிகள் செய்தால் மட்டும் போதாது. மருத்துவமனை நிர்வாகப் பொறுப்புக்கள் செவிலியர்கள் மீது சுமத்தப்படுகின்றன. மருத்துவமனை மேசை, நாற்காலிகளைக் கணக்கு வைப்பது - பழுதுபார்ப்பது முதல் மருந்துகள் ''ஸ்டாக்'' வைத்துப் பராமரிப்பது, மருத்துவக் கருவிகள் முதல் குளிர்பதனப் பெட்டி குளிரூட்டும் இயந்திரம் பராமரிப்பது - பழுது பார்ப்பது வரை அனைத்துக்கும் செவிலியர்களே பொறுப்பாவர். சிகிச்சைக்கும் மருந்துக்குமான தொகையை நோயாளிகளிடமிருந்து வசூலித்துத் தரவேண்டும். தவறிப் பணம் கட்டாமல் நோயாளி வெளியேறிவிட்டால், செவிலியர் தமது சம்பளப் பணத்தைக் கட்டி ஈடு செய்ய வேண்டும்.

அரசு மருத்துவமனைகளில் இத்தகைய பிரச்சினைகள் இல்லை என்றாலும் வேலைப் பளு அதிகமாகவே உள்ளது. 100, 150 படுக்கைகளைக் கொண்ட ஒரு வார்டுக்கு 2, 3 செவிலியர்கள் பொறுப்பு. படுக்கைகளைவிடக் கூடுதலாக அனுமதிக்கப்பட்டுத் தரையிலே கிடத்தப்படும் நோயாளிகளுக்கும் அவர்களே



படிப்பகம்

www.padippakam.com

பொறுப்பு. சிறு எண்ணிக்கையிலான படுக்கைகள் கொண்ட வார்டுகள் என்றால் 4 வார்டுகளுக்கு ஒரு செவிலியர் என்ற கணக்கில் வேலை தரப்படுகிறது.

பெரிய அரசு மருத்துவமனைகளில் 200 குழந்தைகளுக்கு 2 மணி நேரத்தில் ஊசி போட்டு முடிக்க வேண்டும் என்று இயந்திரத்தனமான வேலை கொடுக்கப்படுகிறது. அதேபோல ஒரு நேரத்தில் 18 முதல் 20 பிரசவங்கள் வரை கவனிக்க இரண்டு செவிலியர்களும் ஒரு மருத்துவரும்தான் ஒதுக்கப்படுகிறார்கள்.

மற்ற துறையில் இரவு நேரப்பணி கிடையாது, தொலைபேசி இயக்குபவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மட்டும்தான் இரவுப்பணி சட்ட பூர்வமாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அறுவைச் சிகிச்சை போன்ற பிரிவுகளில் இருப்பவர்களுக்கு இரு மாதங்களும் மற்ற இடங்களில் 15 நாட்களுக்கு ஒரு முறையும் இரவுப் பணி பகல்பணி என்று மாற்றப்படுகிறது. பெரிய அரசு மற்றும் நட்சத்திர மருத்துவ மனைகளில் மட்டும்தான் 8 மணிநேர வேலை, "ஷிப்ட்" முறை ஆகியவை உள்ளன. சிறிய நடுத்தர அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 10 முதல் 12 மணிநேர வேலை; வாரத்திற்கு ஒருநாள் விடுப்புக் கூட அரிதாகவே கிடைக்கிறது.

அரசு மருத்துவமனைகளுக்குப் புதிய செவிலியர் சேர்க்கையே ஏறக்குறைய நிறுத்தப்பட்டுவிட்டது. ஒரு நாளைக்குச் சில மணி நேரங்கள், அதுவும் ஒரு நோயாளிக்கு 3,4 நிமிடங்கள் மட்டுமே செலவிடும் மருத்துவருக்குத் தரப்படும் சம்பளத்தோடு, ஒரு நாளைக்குப் பலமணி நேரம், மாதத்தில் பல நாட்கள் நோயாளிகளுக்குச் சேவை செய்யும் செவிலியர் சம்பளத்தை ஒப்பிடும் போது செவிலியர்களுக்குப் பல மடங்கு குறைவுதான். அறுவைச் சிகிச்சை, பிரசவம் போன்றவற்றுக்கு மருத்துவர்கள் 'பெறுவதோ' ஆயிரக் கணக்கில்: ஆனால் செவிலியருக்கோ, அதிகம் போனால் நூறு ரூபாய் தரப்படுகிறது. மருத்துவர் பெறுவது கட்டணம் என்றும் செவிலியர் பெறுவது (இலவச) இனாம் அல்லது இலஞ்சம் என்று கேவலப்படுத்தப்படுகிறது.

சில நட்சத்திர மருத்துவ மனைகள் தவிர பெரும்பாலான தனியார் மருத்துவமனைகளில் தற்காலிக - ஒப்பந்த ஊழியர்களாகவே மாதம் 1500, 2000 ரூபாய்தான் சம்பளம் தரப்படுகிறது. 10,15 ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு சில நட்சத்திர மருத்துவ மனைகளில் 10,000 ரூபாய்க்கு மேல் தரப்படுகிறது; பயிற்சி, கல்வி, அனுபவமுள்ள செவிலியர்கள் இலட்சக்கணக்கில் மாதச் சம்பளம் பெறும் வெளிநாட்டு வேலைக்கு ஓடிவிடக் கூடாது என்று தக்க வைத்துக் கொள்வதற்கே தரப்படுகிறது.



ஏர்வாடி தீ விபத்திற்குப் பிறகு சென்னை மனநல மருத்துவமனைக்கு செவிலியர்களால் கொண்டு வரப்படும் மனநோயாளிகள். சமூகம் புறக்கணிக்கும் இவர்களுக்கு செவிலியர்கள்தான் ஒரே ஆதரவு.

கிரிமினல் குற்றவாளிகள் கூடத் தங்களுக்குச் சேவை செய்த செவிலியர்களின் காலைத் தொட்டு வணங்கியது உண்டு. நோயாளிகளும் அவர்களின் உறவினர்களும் நன்றிசொல்லுவதும் வாழ்த்துத் தெரிவிப்பதும் உண்டு. ஆனால் சமூகமோ மருத்துவர்களின் திறமையால் மட்டுமே நோயாளிகள் குணமடைவதாக எண்ணுகிறது. மருந்துகளாலும், சிகிச்சையினாலும் நோயாளிகள் ஓரளவுதான் குணமடைய முடியும். செவிலியர்களின் பணிவிடையும் கணிசமான பங்காற்றுகிறது.

பொதுவாக மருத்துவர்கள் அனைவரும் செவிலியர்களைத் தமது சக ஊழியர்களாக மதிப்பதில்லை. அனுபவமும் திறமையும் உள்ள மூத்த ஊழியர்களை பொதுவாக மருத்துவர்கள், குறிப்பாக இளம் மருத்துவர்கள் மதிக்கிறார்கள். அதற்கு நேர்மாறாக இளம் செவிலியர்களை பொதுவாக மருத்துவர்கள், குறிப்பாக முதிய மருத்துவர்கள் மதிப்பதே கிடையாது. எரிந்து விழுவதும், எடுபிடிகளைப் போல நடத்துவதும் உள்ளது. நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் போது நேரிடும் தமது தவறுகளை பொதுவில் மருத்துவர்கள் ஏற்றுக் கொள்வதே கிடையாது. நோயாளிகளைக் குறிப்பிட்ட தூரத்தில் வைத்தும், எளிதில் நெருங்க முடியாதவர்களாக விலகி இருந்தும் சிகிச்சையளிக்கின்றனர். ஆனால், செவிலியர்களோ நோயாளிகளுடனே வாழ்கிறார்கள் என்று சொல்லலாம்.

தவறான சிகிச்சை - தவறான மருந்து கொடுப்பது, ஊசி போடுவது மூலம் ஏதாவது விபரீதம் நேர்ந்துவிட்டால் அதற்கான பழி முழுவதும் செவிலியர்கள் மீது போடப்படுகிறது. சரியாகச் சுத்தம் செய்யவில்லை, நோய்த்தடுப்பு முறைகள் சரியாகப் பின்பற்றப்படவில்லை, மருந்தை மாற்றிக் கொடுத்து விட்டார் என்று பலவாறாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. உண்மையைச் சொல்ல முடியாமல், சொன்னால் வேலைபோய்விடும் என்ற பயத்தால் மௌனமாக இருந்து மருத்துவர்களையும் மருத்துவமனையையும் காப்பாற்றி விடுகிறார்கள். அறுவைச் சிகிச்சை என்றால் கடைசி நிமிடம் வரை நோயாளியைப் பராமரிப்பது, அறுவைச் சிகிச்சை முடிந்து வார்டுக்கு வந்த நிமிடம் முதல், நோய் குணமாகி வீடுதிரும்பும் வரை செவிலியர்தான் பொறுப்போடு கவனித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு சேவை செய்யும் செவிலியர்கள் மீதான சமூக மதிப்போ உயர்வானதாக இல்லை. இன்னும் சொல்லப் போனால், அது தாழ்வாகவும், நன்றி கொன்றவகையிலும் உள்ளது. இரவு நேரப் பணி, பலருடனும் குறிப்பாக ஆண்களுடன் நீண்ட நேரமும் இயல்பாகவும் பழகவேண்டிய வேலை நிர்ப்பந்


படிப்பகம்

www.padippakam.com

தமும் உள்ளது. இதனாலேயே செவிலியர்கள் என்றால் எதற்கும் தயாராக இருப்பார்கள் என்று முத்திரை குத்தி, சமூகமே தவறான மதிப்பீடும் பார்வையும் கொண்டிருக்கிறது.

மேலும், மருத்துவர்கள், தனியார் மருத்துவமனை நிர்வாகிகள், பணக்கார நோயாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்களால் பாலியல் துன்புறுத்தல்களுக்கு இலக்காகிறார்கள். பெரும்பாலான செவிலியர்கள் எதிர்த்து நின்ற போதிலும், பணிப்பாதுகாப்பற்ற சூழலுக்குச் சிலர் பலியாகின்றனர். நோயாளிகள் மத்தியிலேயே புழங்குவதால் செவிலியர்களுக்குத் தொற்றுநோய் பாதிப்பு இருக்கவும், வரவும் வாய்ப்பு கள் உண்டு என்று மற்றவர்கள் கருதுகிறார்கள்.

முழுமையான, நல்லவிதமான சேவை செய்ய கூடிய செவிலியர்கள் நிறையத் தியாகம் செய்ய வேண்டும். பெரிய, கூட்டுக் குடும்பமாக இருந்து குடும்ப உறுப்பினர்கள் நல்ல புரிதலுடன் விட்டுக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கும் போதுதான் தொழிலைச் சரியாகச் செய்ய முடிகிறது. அது பெரும்பாலான குடும்பங்களில் இருப்பதில்லை. வேலை அதிகம் இருப்பது, வேலையை முடித்து விட்டு வீட்டுக்கு வரும்போது மிகவும் அலுப்பாக இருக்கும். நகரங்களில் நிலைமை இன்னும் மோசம். வேலை முடிந்து பேருந்தில் வீடு திரும்பும் போது உடலில் எந்தச் சக்தியும் இருக்காது. சம்பளமும் குறைவாக இருப்பதால் பேருந்துகளைத் தவிர்த்து 'ஆட்டோ' போன்ற வாகனங்களையும் பயன்படுத்த முடியாது.

இரவு நேரப்பணி செவிலியர்களுக்குத் தவிர்க்க இயலாத ஒன்று. குடும்பத்தினரே செவிலியர்களைப் பற்றி எதிர்மறையான கண்ணோட்டம்தான் கொண்டிருக்கின்றனர். வேலைகாரணமாக இவர்களுக்கு எளிதில் திருமணம் அமையாது என்பதே பல குடும்பத்தினரின் அணுகுமுறையாக உள்ளது. குடும்பத்திலுள்ள ஆண்கள் பெண் செவிலியர்கள் மீது சந்தேகத்தைக் கற்பித்து வளர்க்கிறார்கள். சந்தேகப் பார்வை, இரவுநேரப்பணி, பல ஆண்களுடன் இயல்பாகப் பழகுவது ஆகியவை காரணமாக கணவன் - மனைவியிடையே நல்ல உறவு அமைவது அரிதாகவே உள்ளது.

மனைவி மீது பழியைப் போட்டு விட்டு வெளியே தகாத உறவு வைத்துக் கொள்வதும், திருமணத்துக்கு அப்பாற்பட்ட உறவு கொள்வதும், குடி - சூதாட்டம் என்பது செவிலியப் பெண்களின் கணவரிடையே அதிகமாக உள்ளது. இதனால் குடும்பங்கள் உடைகின்றன. மனைவி தன்னை சரியாகக் கவனித்துக் கொள்ளாததால்தான் வேறு உறவுகளைத் தேடிப்போவதாக அக்கணவர்கள் நியாயப்படுத்தவும் செய்கிறார்கள். சில குடும்பங்களில் வயதுவந்த மகள்களைக் கூட தம் கணவனோடு நம்பி வீட்டில் தனியாக விட்டு வைக்க முடியாத அவலம் நிலவுகிறது.



அப்பல்லோ மருத்துவமனையில் நடக்கும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை. மருத்துவர்களுக்கு புகழும், பணமும் கிடைக்கும். செவிலியர்களுக்கு இரண்டும் இல்லை.

குடும்பத்தில் செவிலியப் பெண்களுக்குள்ள ஒரே ஆறுதல் நம்பிக்கைக் குரிய விசயம் சொந்தக் காலில் நிற்கும் அளவு பொருளாதாரச் சுதந்திரமும், சுய நம்பிக்கையும்தான். குடும்பத்திலுள்ள பிரச்சினைகள் சிந்தனையை ஆக்கிரமிக்கும் போது செவிலியர்களும் தவறு செய்கிறார்கள்; அவர்களின் தவறு மருந்தை மாற்றிக் கொடுப்பது, நேரத்துக்குக் கொடுக்க வேண்டிய மருந்துகளைக் கொடுக்காதது, நோயாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்களிடம் கோபப்படுவது - எரிச்சலடைவது என்று வெளிப்படுகிறது. குடும்பப் பிரச்சினைகளோடு அமுத்தும் வேலைப்பளுவும் காரணமாக உள்ளது. இதே காரணங்களால் செவிலியர்கள் அடிக்கடி தமது வேலையைச் சலிப்பூட்டுவதாக உணர்கிறார்கள்.

இருந்தாலும் இது மற்றவர்களின் உயிர் - உடல் சம்பந்தப்பட்ட தொழில்; மற்ற வேலைகளைப் போல பெரிய தவறு நடந்தாலும் திருத்திக் கொள்ளும் வாய்ப்பில்லை; இந்தப் பொறுப்பும், சமூக சேவை உணர்வும்தான் அவர்களுக்கு இன்னமும் ஊக்கம் தருவதாக உள்ளது. மற்றப்படி தொழிலிலும் சேவையிலும் ஊக்கமூட்டுவதற்கான முயற்சிகள், ஓய்வு, மனமகிழ் நிகழ்ச்சிகள், கூட்டு முயற்சி, பாராட்டுதல்கள், விருதுகள், பதவி உயர்வுகள் போன்றவை எந்த வகையிலும் செவிலியர்களுக்குத் தரப்படுவதில்லை. அவர்கள் பணிபுரியும் இடங்களில் உள்ள நிர்வாகமும் இது பற்றியெல்லாம் கவலைப்படாமல் இயந்திரத்தைப் போலவே வேலை வாங்குகிறார்கள்.

நோயாளிகளைச் செவிலியர்கள் கவனித்துப் பேணவேண்டிய அவசியம் இல்லை என்ற பார்வை இப்போது அதிமாகிவிட்டது. பலவிதமான மருந்துகள் இப்போது சந்தைக்கு வந்துவிட்டன. பக்க விளைவுகளைப் பற்றி ஆலோசிக்காமல் அல்லது அதற்கும் சேர்த்தே ஒரு மருந்து கொடுத்துக் குணப்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணுபவர்கள் அதிகமாகிவிட்டனர்.

மருந்துகளைக் கொண்டும், உறவினர்களையே உதவியாளர்களாகக் கொண்டும் குணமாக்கிவிடலாம் என்ற உணர்வும் அதிகமாகிவிட்டது. இதனால் செவிலியர் சேவைக்கு மதிப்பு குறைந்து வருகிறது. செவிலியர்களும் தொழிலில் சோர்வடைந்து போயுள்ளனர்.

நடுத்தர, சிறு மருத்துவமனைகளில் தகுந்த பயிற்சி பெறாத பெண்களைக் கொண்டு செவிலியர் வேலைக்கு வைக்கிறார்கள். அரசு வேலை என்றால் உத்தரவாதமான வேலைதான் என்றாலும் அதற்கும் ஆளெடுப்பது கிடையாது. 10 வருடங்கள் கழித்து தேர்வுநிலைச் செவிலியராகவும், 30 வருடங்கள் கழித்து மேற்பார்வைச் செவிலியர் என்றும் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. பதவி உயர்வு பெற்றாலும் ஒரு நூறு ரூபாய்க்கு மேல் சம்பள உயர்வு கிடையாது. கூடுதலாகக்



படிப்பகம்

www.padippakam.com

கிடைக்கும் பணமும் இந்திர விகாஸ் பத்திரமாகத் தரப்படுகிறது. ஆனால், அதற்குள் ஓய்வு பெறும் நிலையே பல செவிலியர்களுக்கும் ஏற்படுகிறது.

நோயாளிகளுடன் பழகுவதால், சிகிச்சை அளிப்பதால் தொற்று நோய் பாதிப்பு ஏற்படலாம். ஆனால், அதிலிருந்து தமது சொந்தச் செலவிலேயே பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலை. பாதுகாப்புத் தேவையான கையுறை, கழுவும் சோப்பு போன்றவை அரசு மருத்துவமனைகளில் கிடைப்பதில்லை. தனியார் மருத்துவமனைகளைப் போலப் பாதுகாப்பும் கிடையாது. வேலைப்பளு அதிகமாக உள்ளதால் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய இயலாததால் அதுவே பல நோய்களுக்குத் தோற்றுவாயாக உள்ளது.

நல்ல அனுபவமும் பயிற்சியும் பெற்ற செவிலியர்கள் வெளிநாடு செல்ல வாய்ப்புள்ளது. ஆனால், போலியான வேலை வாய்ப்புத் தரகர்களிடம் சிக்கி பல செவிலியர்கள் ஏமாறவும் வாய்ப்புள்ளது. 40,000 முதல் ஒரு இலட்சம் வரை மாதச் சம்பளம் பெற முடியும் என்றாலும் பாலியல் வன்முறைக்குப் பலியாவதும் அடிக்கடி நடக்கிறது. அரபு நாடுகளில் இது போன்ற குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை இருந்த போதிலும் மேல்தட்டு வர்க்கத்தினர் எந்தத் தங்கு தடையும் இல்லாமல் இக்குற்றங்கள் புரிந்துவிட்டுத் தப்பித்துவிட முடிகிறது. அங்கு போனபின் திரும்பிவர வழியின்றி, வேலை நிறுவனங்கள், முதலாளிகள் கடவுச்சீட்டைப் பிடுங்கிக் கொண்டு சிறைவைத்து வேலை வாங்குவதும் ஏமாற்றுவதும்கூட நடக்கிறது. பொருளாதாரக் காரணங்களாலும் சமூகத்தில் ஏற்படும் அவப்பெயராலும் மனமொடிந்து தண்டனைகளுக்கு ஆளாக வேண்டிய நிலையிலும் பல பெண்கள் அங்கு வாழ்கிறார்கள்.

ஊதியக் குறைவு, குடும்பச் சிக்கல், சமுதாய வக்கிரம் எல்லாவற்றையும் மீறி இந்த வேலையில் தொடர்ந்து நீடிக்க மன ஊக்கம் தருவது சேவைத் தன்மையும், பொறுப்புக்களுமே. மருந்துகள் தரும் நிவாரணம் 40% என்றால், மீதம் 60% செவிலியர்களது அன்பான கவனிப்பாலும், ஆறுதலான வார்த்தைகளாலும், நோயாளிகளது உளவியலைப் புரிந்துகொண்டு இன்முகத்துடன் கூறும் இனிய வார்த்தைகளாலுமே.

**– செய்தியாளர்கள் உதவியுடன் சாத்தன்.**

## உண்மைக் கதை:

# ஊமை ஜாடை

**● துரை. சண்முகம்**

ஒரு ஊரில் ஒரு ராஜகுமாரி இருந்தாளாம் என்ற கதையை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஒரு ஊரில் ஒரு வேலைக்காரி இருந்தாளாம் என்று நான் சொல்லப் போகிறேன். தொட்ட தொண்ணூறுக்கும் அந்தத் தெருவே கூப்பிடும் வேலைக்காரியின் பெயர் சின்னப்பொண்ணு. பயிறு உடைக்கணுமா களம் கூட்டணுமா... தோ.. சின்னப்பொண்ண கூப்பிடுங்க என்று கூப்பிடும் அளவுக்கு சின்னப் பொண்ணு தெருவில் பிரபலம் ஆனதற்குக் காரணமில்லாமலில்லை.

வேலையில் திறமை என்பதோடு தாழ்த்தப்பட்டவள் என்பதால் சொன்னதைக் கேட்டு கொடுத்ததை வாங்கிக் கொள்வாள் என்ற ஊரின் உள் கணக்கும் சேர்ந்து எந்த வேலைக்கும் சின்னப் பொண்ணுவைக் கூப்பிடு என்று பேசிக் கொள்வார்கள். அந்த அளவுக்குக் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர உண்மையிலேயே உலகம் அறியாத சின்னப் பெண்ணாக இருப்பாளோ என்ற எண்ணத்துடன் சந்தித்த போது வியப்பானேன்.

அடிபிடித்த பாத்திரங்களைத் தேய்த்துப் போடும் தென்னை நாருக்கும் வரிவரியாய்ச் சுருங்கிப் போன அவள் கைத்தோலுக்கும் அதிகம் வேறுபாடில்லை. நிறம் மட்டும் சற்று வெள்ளையாக இருந்தாள். பேச்சுக்கிடையில் ''வயசுல நான் பாப்பாத்தி மாதிரி செக்கச் செவேல்னு இருப்பேன் தம்பி, எங்க வீட்டுக்காரரே என்ன பவுனு போட்டுதான் கட்டிக்கிட்டாரு. அரையரைக்கா படி நாலு, அரிசி மரக்கா ஒண்ணு, நெல்லு மரக்கா ஒண்ணு, அம்புட்டையும் சீருல வச்சாதான் பொண்ணுன்னு எங்கப்பா வீம்பு புடிச்சாரு, எங்க வீட்டுக்காரரு அத வாங்க முடியாம கொள்ளடக் கரைக்கு அந்தாண்ட ஒரு மாசம் வேலைக்குப் போயி எல்லாம் வாங்கிட்டு வந்துல்ல என்ன கல்யாணம் கட்டிக்கிட்டாரு''. படிக்காகவா என்றேன் ஆச்சரியத்துடன்.

''பின்ன, இப்ப மாரி ஒரு சோறா தின்னம்? கம்பு, கேவுறு, பயிறு, உளுந்து, எத்தன தானியந் தெரியுங்களா? என் நாத்தனா வந்தான்னா ஏதாவது ஒன்ன மடியில கட்டாமப் போவமாட்டா. ஆனா அப்பவும் என்னாங்குற? காதுல கருவகுச்சிதான். வீட்டுக்காரரு நெறய நிலம் ஒப்புகொண்டிருந்தாருல'' பேச்சின் வழியாக வாழ்க்கையின் ஒரு சுற்று வட்டம் புரிந்தது. மெல்லக் கேட்டு வைத்தேன். ''அதெல்லாம் இருக்கட்டும் பழசுல நடந்து நீங்க மறக்க முடியாத எதாவது ஒரு சேதியச் சொல்லுங்களேன்.''

சின்னப்பொண்ணை மையப் படுத்திக் கேட்பது மகிழ்ச்சியை அளித்திருக்கும் போல. ''ஏ குழந்தைவேலு பேரங்கிட்ட போயி இந்த வடைய குடு. நா இந்தத் தம்பிகிட்ட பேசிட்டு வரேன்'' என்று கூட வந்தவனை அனுப்பிவிட்டு குத்துக்கால் போட்டு அமர்ந்தாள். ''ஏன், நல்லா சம்மணம் போட்டு ஒக்காருங்களேன்'' என்றேன். ''ஹி... ஹி... பழக்கமில்ல தம்பி'' வெற்றிலையின் காரை ஒரு சமூகத்தின் கரையாய் அவள் பற்களின் மீது தென்பட்டது. சம்மணம் போட்டு உட்கார்வதைக் கூடச் சாதிப் பழக்கமாக்கிய கொடுமை அதிர்ச்சி அளித்தது. எவ்வளவு முயன்றும் முடியவில்லை. ''பரவால்லை தம்பி'' என்று குத்துக்காலோடு பேச ஆரம்பித்தார்கள். அது மலரும் நினைவா? இல்லை சருகான உண்மையா? அவள் பேசப் பேச பேச்சை தொடர்ச்சியாகக் கேட்பதற்குப் பதில் அங்கங்கே என் சிந்தனை நின்று விடுகிறது.

''ஒரு முற தம்பி என் அக்கா புள்ளகும்மோணம் ஆசுபத்திரில காயலா கெடந்தது. பாக்கப் போவனும்னு நானும் பத்து நாளா திட்டம் போடுறேன். களம் கூட்டுனதுக்கும் காசு வர்ல. கரும்பு வெட்ண கணக்குலயும் காசு வர்ல'' என்று நொந்த குரலோடு சுற்றும் முற்றும் எச்சரிக்கை உணர்வோடு பார்த்துக் கொண்டவளாய் அடங்கிய குரலில் ''தம்பி... இந்த ஊரு சிறுக்கியும் பயலுவளும் நப்பி புடிச்சவங்க, செஞ்ச வேலைக்கு சீக்கிரம் காசு தர மாட்டனுவ'' என்று அவசரமாய் வார்த்தைகளை மறைப்பது போலப்



படிப்பகம்

www.padippakam.com

புகையிலைச் சாறைத் துப்பி மண்ணைத் தள்ளினாள்.

''சரி இவனுவள நம்பி ஆவா துன்னு, பூசாரிகிட்ட ரெண்டு வட்டி வாங்கிகிட்டு கருக்கல்ல பாங்கு ஓதுற நேரத்துல பொறப்பட்டுபோனா அங்க ஆசுபத்திரில சீக்கிரம் வுட மாட்டேங் குறான். கையிலேயே காசு கம்மி. காயலா கெடக்கறவன சும்மா பாக்க முடியுமா? அவனுக்கு ரெண்டு பழம். இந்த பொசு பொசுன்னு அந்த பிசுகட்டு, கூட தொணக்கி வந்தவளுக்கு டிக்கட் டுக்குக் காசு இம்புட்டுக்கும் போவ திரும்பி வர்ற பஸ்ஸூ காசுக்கும் டீ தண்ணிக்குந்தான் மிச்சம் இருந்திச்சு. ஒரு வழியா அவனப் பாத்துட்டு என்னடா சொளையா அம்பது ரூவா வாங்கியாந்தோம், அஞ்சி காசு மிச்சம் இல்லாம திரும்புறோமேன்னு வேலை யோட வந்துகிட்டிருந்தேன் தம்பி.

தண்ணி தாகம் வேற. அதுவா இந்த கும்மோணத்துல பாப்பார சன மெல்லாம் இருக்ககுற தெரு. நானும் செவப்பு, கூட வந்த செல்வியும் செவப்பு, ஒரு ஐயரு வூட்டம்மா திண்ணையில நின்னிச்சி பார்த்தேன். நல்ல சீல கட்டி கொஞ்சம் நல்ல விதமா இருந்தோமா, பே.. பே... பே..ன்னு ஊமை ஜாடை காமிச்சி தண்ணிய வாங்கிக் குடிச்சம். அந்தம்மாவும் தண்ணியக் கொண்டாந்து குடுத்துட்டு அக்கா தங்கச்சி ரெண்டு பேரும் ஊமை யான்னு கேட்டா. பே..பே..பே..பேன்னு நா சாடை காமிக்கிறேன்! இந்த செல்வி முண்ட வேற சிரிக்கப் பாக்குறா. அவள அசமடக்குறதே எனக்குப் பெரிய வேலையா போச்சு.

அதோட வுட்டாளா அந்த ஐயிறு வூட்டம்மா. ஆறு மரக்கா பயிறக் கொண்டாந்து வச்சிட்டு ஒடைக்கறி யாண்ணு கேட்டா. கும்புடப் போன தெய்வம் குறுக்க வந்த கதையா, நானே சொர்ணலெட்சுமியத் தேடுறேன் சொல்லுடியம்மான்னு.. பே..பே..பே.. பெப்பேன்னு ரெண்டு பேரும் உடைக்கி றோம்னு சாடை சொன்னேன். அந்தச் சிறுக்கி என்ன பண்ணா, நாங்க பயிறு ஒடைச்சிக்கிட்டு இருக்குறப்பவே எட்ட ணாவ கையில காமிச்சிட்டு எதித்தாப் புல நிக்கிறா. சோறும் போடுறேன் சோறும் போடுறேன்று சொல்லிகிட்டி ருக்குறா...

ஓகோ...! இவ வயித்துப்புள்ள நழு வுற மாதிரிப் பேசியே ஓசில வேல வாங்கப் போறான்னு எங்களுக்குத் தெரிஞ்சி போச்சி. பே..பே..பே அப்ப டின்னு பத்துரூவா வேணும் இல்லன்னா பயிறு உடைக்க மாட்டேன்னு கையால சாடை காமிச்சேன். அவ கும்மோணத்து பாப்பாத்தியாச்சே எட்டுருவாய்க்கி மேல ஏறவேயில்ல. சரி அவகிட்ட கெடச்ச வரைக்கும் ஆதாயம்னுட்டு எட்டுருவாய வாங்கி இடுப்புல சொரு கிட்டு ஆளவுடுறி அங்காளம்மான்னு ஓட்டமா ஓடியாந்தோம் பாரு. செல்வி வேற வுளுந்து வுளுந்து சிரிக்கிறா, எனக்கா சிரிப்பு, நாஞ்..சிரிக்க, அவ சிரிக்க ரோட்டுல போற சனமெல்லாம் ஒரு மாதிரியாப் பாக்க எங்களுக்கு வெக்கமா போச்சி.''

''சரி, நீங்கதான் வாயத் தொறந்து விளக்கமா பேச வேண்டியதுதான. இப்படி ஏன் ஊமை ஜாடை காட்டு னீங்க'' என்றேன் வேகமாக நான்.

''நீங்க வேற தம்பி தோலு ஒரு மாதி ரியா இருந்தவாசி அவ ஒத்துக்கிட்டா. பேசிருந்தா தெரிஞ்சிருக்கும்ல. எங்க ளுக்கு பேச்சுல மறைக்கத் தெரியாது தம்பி! அதான் பெப்பே.. பெப்பபே..'' ஜாடை காண்பித்து விட்டு சரட்டெனத் திரும்பி எச்சிலைத் துப்பிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

என்னால் சிரிக்க முடியவில்லை. எல்லோருடைய முகத்திலும் துப்பிய மாதிரி இருந்தது. உங்களுக்கு..?

●



படிப்பகம்

www.padippakam.com

## குஜராத், பஞ்சாப், காஷ்மீர்:

# அரசு பயங்கரவாதமும் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதமும்

**கோத்ரா:** அயோத்தியிலிருந்து திரும்பிய ரயில் கொளுத்தப்பட்டு ஒரே பெட்டியில் 59 பேர் உயிரோடு கொளுத்தப்பட்ட இடம். இந்தச் சம்பவத்தை யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால், ''ரயிலுக்கு வெளியே இருந்து எரிதிரவம் ஊற்றிக் கொளுத்தி விட்டார்கள் வெறிபிடித்த முசுலீம்கள்'' என்று பரப்பப்பட்ட கதை. இந்தியாவில் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கூடப் பரவியிருக்கும் - நெருப்பு கூட அவ்வளவு வேகமாகப் பரவாது. இப்போது உண்மைகள் வெளிவந்து விட்டன. உண்மை கனமாக இருப்பதால் அவ்வளவு வேகமாகப் பரவவில்லை போலும்! தடயவியல் ஆய்வாளர்கள் ''பற்றி எரியக்கூடிய 60 லிட்டர் திரவத்தை மேட்டில் நின்ற ரயில் மீது அருகே பள்ளமான நிலத்திலிருந்து வண்டிக்குள் வீச முடியாது!'' என்று சொல்லி விட்டார்கள்.

கோத்ராவுக்குப் பிறகு, 2500 முசுலீம்களை வெட்டிக் கொல்வதற்கு, நூற்றுக் கணக்கான முசுலீம் பெண்களைக் கற்பழித்துக் கொல்வதற்கு, அதன் பிறகு ஓட்டுப் பொறுக்குவதற்கு 'கோத்ரா கதை' பயன்பட்டது. ஆனால் இரயில் எரிப்பில் சிக்கி இறந்த மூதாட்டியின் கணவர் 82 வயது முதிய டாக்டர் கிரிஷ்பாய் ரேவால் 'நானாபாய்-ஷா கமிசன்' முன்பாக உண்மைகளை எடுத்து வைத்தார்: ''எங்களைப் பயன்படுத்தி விட்டார்களே அய்யா! முசுலீம்களைக் கொல்வதற்கு கோத்ரா, கோத்ரா என்று ஏலம் விட்டு வெறி ஏற்றிவிட்டார்களே! இதுவா இந்து தத்துவம்? நான் வெட்கப்படுகிறேன்!'' சொல்லிமுடிப்பதற்குள் அவர் கதறி அழுதுவிட்டார். ''நரோடா பாட்டியாவில் குல்பர்க் குடியிருப்பில் இளம் பெண்களைக் கற்பழித்தார்களே, குஜராத்திகளான நாங்கள் பெருமைப்படவா முடியும்?'' என்று உறுதிவாய்ந்த குரலில் சாட்சியம் சொன்னார் ரிக்ஷா தொழிலாளி பிரகாஷ் பாய்.

– இவர்கள் இருவரும் இந்துக்கள். தங்கள் குடும்பங்களைக் கலவரத்தில் காவு கொடுத்த இவர்கள் மோடியைத்தான் குற்றம் சாட்டுகிறார்கள். ஆனால் இந்தக் குற்றவாளி விசாரிக்கப்படவே இல்லை!

முசுலீமை மணந்த ஒரே 'குற்றத்து'க்காக கர்ப்பிணி கீதா பெண்ணின் வயிற்றைக் கிழித்துக் கருவை ரத்தத்தோடு வழித்தெடுத்து, வெட்டி எறிந்து, தெருவில் வீசினார்களே, அதற்கு யார் காரணம்? மோடிதான். இப்போது தப்பி உயிரோடிருப்பவர்கள், இந்து - முசுலீம் என்று வேறுபாடு இல்லாமல் மோடி மீது, வி.இ.ப. தலைவர் தொகாடியா மீது, பல நூறு போலீசு அதிகாரிகள் மீது, அரசாங்க அதிகாரிகள் மீது புகார் சொல்கிறார்கள். அப்போதைய முதன்மைச் செயலர் சுப்பாராவ், உள்துறைச் செயலர் அசோக் நாராயண், டி.ஜி.பி. கே.சக்ரவர்த்தி என்று 88 அதிகாரிகளைக் குற்றம் சொல்கிறார்கள் மக்கள். வன்முறை தூண்டிய உள்ளூர் பாஜக தலைவர்கள் 730 பேர் மீது மக்கள் குற்றம் சொல்கிறார்கள். 'பெஸ்ட் பேக்கரி வழக்கில்' இளம்பெண் சாட்சியான ஜாஹிரா ஷேக் உறுதியாக நிற்பதால் மோடி அரசு ஆடி கதி கலங்கி நிற்கிறது. அவரது வழக்கில் மோடி ஆட்களின் குறுக்கீடு இருப்பதால், வழக்கை உச்சநீதி மன்றப் பார்வையிலேயே விசாரிக்கவேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறார் பத்திரிகையாளர் தீஸ்தா சேதல்வாத். அவ்வாறு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகச் செய்தி வந்த உடனேயே மோடி ஆடிப்போய் விட்டான்.

**அரசியல் நிர்ணயச் சட்டப்படியே கிரிமினல் குற்றவாளிகளான மோடி முதல் உள்ளூர்ச் சங்கப்பரிவாரக் கேடிகள் வரை ஏன் உள்ளே தள்ளப்படவில்லை? நாடே அவர்களைக் குற்றம் சாட்டிய பின்னாலும், சட்டம் ஏன் இம்மியளவு கூட அசைய மறுக்கிறது?**

ஆனந்த் மாவட்டத்தில் ஓத் என்ற இடத்தில் 23 முசுலீம்கள் கொல்லப்பட்ட சம்பவத்தில் முக்கியச் சாட்சிகளின் விசாரணைகளும் முறையாக நடக்கவில்லை. 10,000 முசுலீம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு, கிட்டத்தட்ட 1,16,000 முசுலீம்கள் நிவாரணமுகாம்களில் தவிக்கிறார்கள். அவர்களின் வாழ்வுக்காக என்று அறிவித்து ரூ 150 கோடி அனுப்பினார் பிரதமர்; அந்தப் பணமும் மக்களை எட்டவில்லை. முசுலீம்களின் வீடுகள், நிலங்கள் இந்து வெறியர்களால் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டன. இவை அத்தனைக்கும் ஏன் விசாரணை நடக்கவில்லை? அரசியல் நிர்ணயச் சட்டப்படியே கிரிமினல் குற்றவாளிகளான மோடி முதல் உள்ளூர்ச்சங்கப்பரிவாரக் கேடிகள் வரை ஏன் உள்ளே தள்ளப்படவில்லை? நாடே அவர்களைக் குற்றம் சாட்டிய பின்னாலும், சட்டம் ஏன் இம்மியளவு கூட அசைய மறுக்கிறது? இவர்களுக்கான தண்டனையை யார், எப்போது தருவார்கள்?

•

1947, 1960, 1984, 1987, 1989, 1992-93, 2002-இவை வெறும் எண்கள் அல்ல; முசுலீம்களுக்கு எதிராக இந்துமத வெறியர்கள் இந்தியாவின் பலபகுதிகளில் மிகப் பெரிய அளவில் கொலைகளை, நாசத்தை நடத்திய ஆண்டுகள். ஆனால் அவற்றை நடத்திய எவருமே ஒரு தண்டனை கூடப் பெறவில்லை - தண்டனையிலிருந்து விலக்கு கொடுக்கப்பட்டு விட்டார்களா? அப்படி விலக்கு கொடுக்கும் உரிமையை அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்? அரசின் பொறுப்பு எப்படித் தட்டிக் கழிக்கப்பட்டது?


முதலில், வன்முறை தூண்டுபவர்கள் வெளிப்படையாகவே ஆயுதங்கள், திரிசூலம்-கத்தி போன்ற கருவிகளை வினியோகிக்கும் போது அரசு ஏன் சும்மா இருந்தது?

முசுலீம்கள், தலித்துக்கள், பழங்குடி மக்களுக்கு எதிரான வன்முறை தூண்டும் பேச்சுக்களை மேடை போட்டுப் பேசும் போது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

சம்பவங்கள் நடந்தபிறகு, சட்டப்படி ஏன் வழக்குகளை முறையாகப் பதியவில்லை? வழக்கு நடத்தி ஏன் தண்டனை வழங்கவில்லை? பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏன் இழப்பீடு செய்யவில்லை?


படிப்பகம்

www.padippakam.com



கடைசியாக நடந்த குஜராத் இனப்படுகொலைவரை-நீதி கிடைக்கவில்லை; மோடி மற்றும் ஆறு அமைச்சர்கள் மீது நேரடியான குற்றச்சாட்டுக்கள் உள்ளன; '*சமூக அக்கறை கொண்ட குடிமக்கள் பேராயம் - 2002*' உண்மை அறிந்து வெளியிட்ட அறிக்கையில் எல்லா ஆதாரங்களையும் கொடுத்துவிட்டது. அதில் தொகாடியாவும் ஒரு குற்றவாளி; அதில் அரசு அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் அடங்கிய குற்றவாளிகளின் பட்டியல் உள்ளது; அவர்களில் பலர் பா.ஜ.க. மற்றும் சங்க பரிவார அமைப்புகளில் தொடர்போடும், உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள்.

### *1992-93 பம்பாய்க் கலவரம்:*

''அடுத்து வருகின்ற சில நாட்கள் நம்முடையவை'' என்று 'சாம்னா'வில் தலையங்கம் எழுதிக் கலவரம் தொடங்கி வைத்ததும், ''போதும்! வெறியர்களுக்கு (முசுலீம்களுக்கு) உரிய இடத்தை நீங்கள் காட்டிவிட்டீர்கள்'' என்று அதே 'சாம்னா'வில் அதிகாரபூர்வமாகக் கலவரத்தை முடித்து வைத்ததும் சிவசேனாத் தலைவன் பால் தாக்கரேதான். ''தேச நலனை முன்னிட்டு இன்றுடன் கலவரத்தை நிறுத்திக் கொள்கிறேன். இந்தத் தரும யுத்தம் பம்பாயுடன் முடிவதல்ல; நாடு முழுவதும் முசுலீம்கள் விலைகொடுக்க வேண்டி வரும்'' என்றான் தாக்கரே. இந்தச் சாட்சியங்கள் போதும் - அவனை உள்ளே தள்ள; ஆனால் செய்யவில்லை.

நாட்டுப் பிரிவினையின் போதும், அறுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பிவாண்டி-பம்பாய்-ஜலகாவ்(ன்) மதப் படுகொலைகளிலும் அரசு பொறுப்பேற்கவில்லை. விசாரணைக் கமிசன் குற்றம் சாட்டிய தனிநபர்கள், அமைப்புக்கள், அதிகாரிகள் தண்டனையிலிருந்து விலக்கு பெற்றுவிட்டார்கள். 1984 டெல்லியில், 1987 மீரட் - மலியானாவில், 1989 பாகல்பூரில், இப்போது 2002 குஜராத்தில் - தொடர்ந்து அதுபோலவே நடந்துள்ளது.

பஞ்சாப், காஷ்மீர், வடகிழக்கு எல்லை மாநிலங்களில் சமூகத்தின் கோளாறுகளால் நிகழும் எல்லாச் சம்பவங்களையுமே 'தீவிரவாதம்-பிரிவினைவாதம்' என்று சொல்லிவிட்டு அதை அடக்குவதற்கு வன்முறை பிரயோகிப்பது தவறல்ல என்று அரசு அறிவித்தது; இப்போதும் அப்படியே செய்கிறது.

பஞ்சாப், மற்றும் காஷ்மீர் என்ற இரண்டு எடுத்துக்காட்டுக்களை மட்டும் விரிவாகப் பார்க்கலாம்.

### *பஞ்சாபில் என்ன நடந்தது? என்ன நடக்கிறது?*

பஞ்சாபில் நடந்துவரும் போலீஸ் அடக்குமுறை, சித்திரவதைகளுக்கு ஒருசில எடுத்துக்காட்டுக்கள் இதோ. கை முட்டிகளால் அடிப்பது, பூட்சு கால்களால் உதைப்பது, நீண்ட மூங்கில் கம்புகளால் விளாசுவது, மரக்கைப் பிடி கொண்ட தோல்வாரினால் ரத்தம் பீறிடத்தாக்குவது, முனையில் உலோக வார்ப்புத்தலை கொண்ட பெல்ட்டுகள் மற்றும் துப்பாக்கியின் உலோக முனையால் அடிப்பது, முதுகின் பின்புறம் கைளைக் கட்டி அதை அந்த ரத்திலிருந்து கட்டி மொத்த உடம்பையும் பலமணிநேரம் தொங்கவிடுவது, கைகளை மிதித்துக் கசக்குவது, அல்லது சுத்தியால் அடிப்பது, மின்சார ஷாக்குகள் கொடுப்பது, பகுதியளவில் தோலை எரிப்பது, சிலநேரங்களில் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கழியால் சூடு போடுவது, குறடுகொண்டு நகங்களைப் பிய்த்து எறிவது; (ச்) சீரா என்ற கொடிய சித்திரவதை: இடுப்பை முறித்து இரண்டு புறமும் (30 நிமிடம் தொடர்ந்து) இழுத்துக் கட்டி விடுவது, தொடைமீது உருட்டுக்கட்டை அல்லது உலக்கை வைத்து அதன் மீது போலீஸ் அதிகாரிகள் ஏறிநிற்பது, கொசுறாக - குண்டிக்குள்ளே மிளகாய்த்தூளை ஏற்றுவது - இவை குறைந்த அளவிலான 16 வகைச் சித்திரவதைகள்.


**எத்தனையோ இராணுவ அதிகாரிகள் ஒரு குற்றமும் செய்யாத முசுலீம்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மீது எந்த நடவடிக்கைகளும் இல்லை. இந்த அழகில் ஒருவழக்கில் உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்த போது, அதிகாரிகள் மீது வரும் எல்லாப் புகார்களையும் விசாரிக்க வேண்டும் என்று 'உபதேசம்' கூடச் செய்திருக்கிறது.**

'பாதுகாப்புப்படை' என்ற பெயரில் அரசுப்படை நிறைவேற்றிய கொலைகள் பற்றி 1982-லும், 1997-லும் இருமுறை மனித உரிமைக் கமிசன் அறிக்கை கொடுத்தது; அவ்வறிக்கையில் எழுதிய கடைசிவரிகளில் - ''மனித உரிமைகளைக் காலால் மிதிக்கும் நபர்களை விசாரித்துத் தண்டிக்கச் சட்டவிதிகள் இருந்தும் ஏட்டில் புகுத்தப்படாத, 'தண்டனையிலிருந்து விலக்கப்படும் உரிமை'யை அவர்கள் அனுபவிக்கிறார்கள்'' என்று எழுதியது. சப்பென்று மூஞ்சியில் அறைந்தது என்று சொல்லலாம்.

மக்களின் வாழ்க்கையில் வன்முறை கொண்டு குறுக்கிட்டவர்களை எதிர்த்து பஞ்சாபியர் ஓயாது போராடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களை அரசின் எடுபிடிகள் அள்ளி எடுத்துப்போய்ச் சாம்பலாக்கி விட்டார்கள். இதில் அவலம் என்ன வென்றால், பொறுப்பு ஏற்க வேண்டிய அரசை ஒவ்வொரு நொடியும் கேள்விகளால் துளைத்தெடுத்து அம்பலப்படுத்திய பல வழக்குரைஞர்களை, ஜஸ்வந்த் சிங் கால்ரா போன்ற மனித உரிமைப் போராளிகளை போலீஸ் ரகசியமாகக் கொன்று காணாமல் அடித்து விட்டது. 'ஒரு பிடிச் சாம்பல்' என்று தனியே ஒரு நூலே வெளிவிட்டிருக்கிறார்கள் பஞ்சாபில்.

அம்ருத்சர் மாவட்டத்தில் ஒரு கிராம அதிகாரி (சர்பஞ்ச்) அஜயப்சிங். 1991, டிசம்பர் 20 அன்று அவரது மூத்த மகன் குல்வீந்தர் சிங் (அவர் ஓர் அரசு ஊழியர்) போலீசால் பிடித்துச் செல்லப்பட்டார். ஏன்? எதற்காக? இப்போது

www.padippakam.com



இந்திய இராணுவத்தால் கொலை செய்யப்பட்ட மகனுக்காக கண்ணீர் விடும் காஷ்மீர் தாய்.

அவன் எங்கே? - கேள்விகளைக் கேட்டுக் கேட்டு ஒவ்வோர் போலீஸ் ஸ்டேசனாக, ஒவ்வோர் அதிகாரியாக 5 1/2 ஆண்டுகள் தேடித்தேடி அலைந்தார் அஜயப். வீடுதிரும்பும் போதெல்லாம் ''அவர் கிடைச்சாரா?'' ''அப்பா எங்க தாத்தா? எப்போ வருவாரு?'' -ஒரே மாதிரியான ஆவலும், வலியும், வேதனையும் நிரம்பிய கேள்விகளை மருமகளும், பேரன் - பேத்திகள் மூவரும் கேட்கும் போது அவர் இதயம் நொறுங்கியது.

பொறுப்பில்லாத அரசிடம் மோதி என்ன கிடைக்கப் போகிறது? தன் மகன் எல்லோரையும் போல ரத்தமும் சதையுமாகப் பிறந்தவன், எல்லோரையும் போல வாழ வேண்டும். அவன் கற்பனைப் புராண விலங்கல்ல; ஓர் மனிதன் என்று நிரூபிக்க அஜயப் படாத பாடு பட்டார். கடைசியில் ஒருநாள் - ஓர் வெள்ளைக் காகிதத்தில் கறுப்பு மையால் ''நீதி கிடைக்காத வாழ்க்கையிலிருந்து தப்பிக்க எனக்குத் தெரிந்த ஒரே வழி தற்கொலை'' என்று எழுதி வைத்து விட்டு, பொற்கோவிலுக்குள்ளேயே விஷமருந்தி உயிர் நீத்துவிட்டார்.

அஜயப் பட்டுமல்ல - இவரைப் போன்றே 222 பேர் - தங்கள் உறவு காணாமல் போன அதிர்ச்சியிலேயே செத்துப் போனார்கள். மொத்தம் 838 பேர் காணாமல் போனவர்கள். அவர்களது உறவினர் 500 பேருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இத்தனைக் கொடுமையான மனச்சித்திர வதைகளுக்கு மத்தியில் தான் அந்த 838 குடும்பத்தாரும் சட்டத்தின் மூலமாக தங்கள் உறவினரைக் 'காணாமல் அடித்த' குற்றத்தைச் செய்தவர்களுக்குத் தண்டனை கோரிப் போராடினார்கள்.

### *அழகு கொஞ்சும் காஷ்மீரில் அருவெறுப்பான ஆட்சி*

காஷ்மீரின் அழகு கொஞ்சும் இயற்கைக்கும், அங்கே வாழும் அழகு மிக்க மக்களுக்கும் அவர்கள் வாழ்க்கைக்கும் பெரிய முரண். அது நரகம். எப்போது வேண்டுமானாலும் ஆளைக் கடத்திச் சென்று விடுவது, சுட்டுக் கொன்று காணாமல் அடிப்பது, கற்பழிப்பு, சித்திரவதை - இது 50 ஆண்டு வரலாறு. இந்திய ராணுவம் தான் முதல் குற்றவாளி; 'நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து' என்ற மூன்றே சொற்களில் எந்த வழக்கையும் முடித்து விடுகிறது ராணுவம். அரசு யாரை தீவிரவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறதோ, அவர்களில் பலர் ''சுதந்திரக் காஷ்மீர்'' என்ற அரசியலை முன் வைத்து போராடுகிறார்கள். அவர்களில் பெரும்பான்மை மதவாதிகள். அவர்களின் வழிமுறையை விமரிசித்து சரி, தவறு பார்ப்பது வேறு; காஷ்மீரில் நுழைந்து அத்துமீறி இந்தியா கொடுங்கோல் ஆட்சி செய்வது வேறு. ஆனால் அந்த ஒன்றரைக் கோடி காஷ்மீரிகளின் வாழ்க்கை உலகின் கண்களிலிருந்து மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. காஷ்மீர் மக்களின் உரிமைகள் பறிபோவதைப் பற்றி யாரும் உள்ளே நுழைந்து ஆராய்ந்து சொல்ல முடியாது - அதற்கு அனுமதி இல்லை. மீறிச் சென்று நிலைமையைப் பரிசீலித்து அறிக்கை வெளியிட்டவர்களை (இதில் ஆந்திர மாநில மக்கள் உரிமைக் குழுவும் ஒன்று) ஒரு விரல் நுனியில் மறுத்துவிட்டது அரசு - ''அவர்களின் அறிக்கை இராணுவத்தினர் மீது அவநம்பிக்கை கொள்ள வைக்கும் அறிக்கை. அதை ஏற்பதற்கில்லை.''

காஷ்மீர் நிலைமைகளை வெளி உலகு அறியச் செய்த ஒரே காரணத்துக்காக, எச்.என்.வாஞ்சூ, டாக்டர் அஷாய், டாக்டர் குரு ஆயோர் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 90-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் உண்மை அறியும் குழுக்களில் சென்ற சமூக ஆர்வலர்கள் மெள்ள விலகிக் கொண்டார்கள். காரணம் - இந்திய ராணுவ வெறி நாய்கள் மற்றும் முசுலீம் தீவிரவாதக் குழுக்களின் தொல்லைகளால் வந்த பயம். மனித உரிமைச் செயல் வீரராக வாழ்ந்த ஜலீல் அந்திராபி 1996 (மார்ச் 23)-ல் இந்தியப் பாதுகாப்புப் படைகளால் கொல்லப்பட்டதே கடைசி எச்சரிக்கை.

ஒரு 'ரோஜா' படத்தை வைத்து காஷ்மீரை எடை போடாதீர்கள். அந்தப் படத்தில் காட்டப்பட்ட ராணுவத்தாரின் வாழ்க்கை மேலோட்டமான பொய்க் கூடு. எதார்த்தம் என்னவென்றால்,

---

## தோழர் ரவிக்குச் சிவப்பஞ்சலி!



தஞ்சை ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கத்தின் செயலரும், மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் செயல்வீரருமான தோழர் ரவி (ரவிச்சந்திரன்) அவர்கள் 4.2.04 அன்று காலை பத்துமணியளவில் தஞ்சை மருத்துவமனையில் தீவிர மாரடைப்பால் காலமானார்.

தஞ்சையில் ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கத்தை உருவாக்குவதில் முன்னணிப் பாத்திரம் ஆற்றிய தோழர் ரவி, ம.க.இ.க.வின் அனைத்து நடவடிக்கைகளிலும் பணியாற்றியவர். தமிழ் மக்கள் இசைவிழாவின் அரங்கை அவரும், அவருடைய ஆட்டோவும் தமது சுறுசுறுப்பான வேலைகளால் ஆக்ரமித்திருப்பார்கள். இவ்வாண்டு அந்தக் காட்சியைப் பார்க்க முடியாது.

தோழரின் இறுதி ஊர்வலம் 5.2.04 அன்று காலை பதினொரு மணிக்குப் புறப்பட்டு பூக்காரத் தெரு இடுகாட்டில் எரியூட்டப்பட்டது. ஏராளமான தோழர்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

தோழருக்கு எமது சிவப்பஞ்சலி!

*- மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு.*



படிப்பகம்

www.padippakam.com

காஷ்மீரில் ராணுவத்தான் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், செய்வான். அதையா 'ரோஜா'வில் காட்டினார்கள்?

பாதுகாப்புப்படை ராணுவத்துக்குச் சட்டப்படி எல்லாவிதத்திலும் பாதுகாப்பு உண்டு. ஆயுதப்படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம் - பிரிவு 6 (AFSPS) பின்வருமாறு சொல்கிறது: ''மத்திய அரசின் முன்-அனுமதி இல்லாமல் இவர்களில் யார் மீதும், அவர்கள் குற்றம் செய்து விட்டார்கள் என்றோ, குற்றம் நடத்தியிருப்பதாகக் கருதியோ, வழக்கு தொடுக்கவோ, சட்ட நடவடிக்கை எடுக்கவோ அல்லது வேறெந்தச் சட்ட ரீதியான முறையீடுகள் செய்யவோ கூடாது.''

எத்தனையோ ராணுவ அதிகாரிகள் ஒரு குற்றமும் செய்யாத முசுலீம்களைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மீது எந்த நடவடிக்கைகளும் இல்லை. இந்த அழகில் ஒருவழக்கில் உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்த போது, அதிகாரிகள் மீது வரும் எல்லாப் புகார்களையும் விசாரிக்கவேண்டும் என்று 'உபதேசம்' கூடச் செய்திருக்கிறது.

'மனித உரிமை மீறல்கள்' என்பது ராணுவத்தைப் பொறுத்த அளவில் தண்டனைக்கு அப்பாற்பட்டது. அதில் சட்ட ரீதியாக அதற்குக் கிடைத்துள்ள பாதுகாப்பு, ஒருமுகம். இன்னொரு முகம் - அரசியல் பாதுகாப்பு. ராணுவத்தைக் காப்பாற்றுவதற்காக, அரசியல்வாதிகள் பொய்களை அள்ளி வீசி விடுகிறார்கள். இவை கொடுக்கும் தெம்பில்தான், தேசபக்தி என்ற பெயரிலும், 'இந்தியப் பிராந்திய ஒற்றுமையைப் பாதுகாப்பது' என்ற பெயரிலும் அவர்கள் வானளாவிய உரிமமும் / உரிமைகளும் பெற்றிருக்கிறார்கள்.

●

பத்திரிக்கைகள், வானொலி, தொலைக்காட்சிகளின் மவுனத்தின் பின்னே குஜராத், பஞ்சாப், காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்களில் நடக்கும் பல ஆயிரம் ரத்தப்படுகொலைகள் மறைந்திருக்கின்றன என்று புரிந்து கொண்டால், பெரிய அளவிலான படுகொலைகளைச் செய்பவர்களும் அரசும் தண்டனையிலிருந்து தப்பிவிட்டார்கள் என்றும் புரிந்துகொள்ளலாம்.

**தண்டிக்க முடியாத சட்டங்களை வைத்துத் தண்டிக்கமுடியுமா?**

*ஆதாரம்: காம்பேட் கம்யூனலிசம் (மதவெறிக்கெதிராகப் போராடுவோம்) இதழ்: அக்டோபர், நவம்பர் 2003.*

● முருகேசன்

# இன்னும் எத்தனை உதவும் கரங்கள்

''தாய்மை, செவிலியர் என்றாலே நமக்கு ஒரு பெண்ணின் நினைவுதான் வரும். அது ஒரு ஆணிலிருந்தும் வெளிப்பட முடியும்'' என்று அந்த அனுபவத்தில் தோய்ந்து பேசும் வித்யாகர், 1983-ஆம் ஆண்டு திரையரங்க வாசலில் வீசப்பட்ட ஒரு குழந்தையுடன் ஆரம்பித்த நிறுவனம் ***'உதவும் கரங்கள்'***. இன்று சென்னை, கோவை நகரங்களில் ஐந்து கிளைகள் 1700 உறுப்பினர்களுடன் வளர்ந்திருக்கும் அந்த நிறுவனம் சமூக சேவைக்கு ஆதரவளிக்க விரும்பும் மக்கள், நிறுவனங்களிடையே மிகவும் பிரபலம். மேலும் புதிதாகத் தொடங்கப்படும் சேவை அமைப்புக்களைப் பதிவு செய்யப் பரிந்துரைக்கும் பொறுப்பையும் அரசு 'உதவும் கரங்களு'க்கு வழங்கியுள்ளது.

''இப்படித்தான் வாழவேண்டும் என நானே திட்டமிட்டுக் கொண்டதல்ல என் வாழ்க்கை. இது அபாயகரமான, கடினமான, யாரும் நன்றி பாராட்டாத வேலை என்றாலும் யாராவது ஒருவர் செய்யவும் வேண்டும்'' என்று கூறும் வித்யாகரும் ஆதரவற்ற பின்னணியிலிருந்து ஒரு முதியவரால் வளர்க்கப்பட்டவர்தான். கருநாடகத்தைத் தாயகமாகக் கொண்ட இவர் உளவியல், சமூகவியல், சமூக நலவியல், சட்டம் என சமூக சேவைக்குதவும் பல்துறைக் கல்வி முடித்தவர். அரசு தொழுநோய் மற்றும் மனநல மருத்துவமனைகளில் 3 ஆண்டுகள் பணியாற்றியிருக்கும் வித்யாகர் முக்கியமாக அன்னை தெரசாவின் கீழே சில மாதங்கள் பணிபுரிந்தது ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

சென்னை அரும்பாக்கத்தில் உதவும் கரங்கள் முதலில் ஆரம்பித்த இடம் இன்று அதன் தலைமை அலுவலகமாகவும் கைக்குழந்தைகளை மட்டும் பராமரிக்கும் இல்லமாகவும் பயன்படுகிறது. அங்கேயிருந்த வரவேற்பறையில் காத்திருந்தபோது மூன்று அட்டவணைகளைப் பார்த்தோம். முதலாவதில் குழந்தைகள், சிறுவர்கள், மூளை வளர்ச்சி குன்றியவர்கள், மனநோயாளிகள், எய்ட்ஸ் நோயாளிகள், *சாகும் நிலையில் உள்ளவர்கள்*, ஊனமுற்றோர், கைவிடப்பட்ட பெண்கள் என உதவும் கரங்களில் பராமரிக்கப்படுபவரின் வகைகள் மற்றும் எண்ணிக்கையும், இரண்டாவதில் உதவும் கரங்களில் உடனடித் தேவை என்ற தலைப்பில் அரிசி, பால்பவுடர், போர்வை, மருந்துகள் என பொருட்பட்டியலும், மூன்றாவதில் நன்கொடைக்காக ஒரு நபரின் தினசரிச் செலவுப் பட்டியலும் இருந்தன. கூடவே உதவும் கரங்களின் உறுப்பினர்கள் தயாரித்திருந்த கைவினைப் பொருட்களும் விற்பனைக்கிருந்தன.

இந்தக் காட்சிகளுடன் அங்கேயிருந்த அசாதாரணமான அமைதியும் சேர்ந்து நமக்குக் குழப்பத்தையும், அயர்வையும் தந்தன. ஒப்பீட்டளவில் பிரச்சினைகளின்றி சகஜமான வாழ்க்கை வாழும் நமக்கு ''சாகப் போகிறவர்கள்'' என்ற கணக்கும், அதிலிருந்து எழும் அநாதைகள் குறித்த சித்திரமும் உதவும் கரங்களை மகிழ்ச்சிக்குரிய இடமாக உணர்த்தவில்லை.

ஒரு குழந்தையின் வளர்ப்புக்கே உலகப் பிரச்சினை போல் சலித்துக் கொள்ளும் சமூகத்தில் எத்தனைக் குழந்தைகள், நோயாளிகள், ஆதரவற்ற பெண்கள், அன்றாடச் சாவுகள், தினசரி வரும் புதிய சோகங்கள்... அங்கேயிருந்த 20 நிமிடத்தில் உதவும் கரங்களின் 20 ஆண்டு வரலாற்றை யூகித்தபோது சற்றே பயமாகவும், பிரமிப்பாகவும் இருந்தது. முதல் பார்வையில் தோன்றிய இந்த உணர்ச்சியுடன் தொடங்கிய பயணம் உதவும் கரங்களின் திருவேற்காடு கிளையைக் கண்ட பிறகும், வித்யாகருடன் நடத்திய ஒரு விரிவான உரையாடலுக்குப் பிறகும் சற்றே தெளிவடைந்தது.

●●●

83-இல் உதவும் கரங்களை ஆரம்பிக்கும் போதிருந்த மனநிலைக்கும், இப்போதிருக்கும் மனநிலைக்கும் முரண்பாடு இருக்கிறதா என்ற கேள்விக்கு, அது எப்படி இல்லாமல் போகும் என்று சலிப்புடன் திருப்பிக் கேட்டார் வித்யாகர். அது தான் விரும்

www.padippakam.com

பியதை விரும்பியபடி செய்ய முடியாமல் போனது, செய்து கொண்ட சமரசங்கள், அருகி வரும் தொண்டர்கள், அதிகரித்து வரும் பிரச்சினைகள் போன்ற நடைமுறைச் சிக்கல்கள் மட்டுமல்ல, உண்மையில் அனாதைகளை உற்பத்தி செய்யும் சமூக நிலைமைகள் மாறாமல் அவர்களில் ஒரு சிலருக்கு மறுவாழ்க்கை கொடுத்து விட முடியாது என்ற கொள்கைப் பிரச்சினையும் கூட.

''நாங்கள் தொண்டூழியம் செய்து தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக ஏழைகளைப் படைத்த இறைவனுக்கு நன்றி'' எனும் தெரசாவின் பிரபலமான கூற்றை வித்யாகர் ஏற்றுக் கொள்ளவில்லை. ''சமூகத்தால் பராமரிக்க முடியாதவர்கள் யாரும் இல்லை எனும் நிலை வரவேண்டும், உதவும் கரங்கள் என்னுடன் அழிந்து போகவேண்டும்'' என்பதையே அவர் பல நேர்காணல்களில் கூறியிருக்கிறார். ''1983-இல் 30 அநாதைச்சிறுவர் இல்லங்கள் மட்டுமே இருந்தன. இன்று 180 சிறுவர் இல்லங்களும், 200 முதியோர் இல்லங்களும் இயங்க, சுமார் 1500 அமைப்புக்கள் என்னிடம் பரிந்துரைச் சான்றிதழுக்கு விண்ணப்பித்திருக்கின்றன. இது போன்ற அமைப்புக்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன'' என்று கூறும் வித்யாகர் தனது விருப்பத்திற்கு நேரெதிராக இருக்கும் யதார்த்தத்தை மறுக்கவில்லை.

இருப்பினும் இதே யதார்த்தம் வித்யாகரின் விருப்பத்தைத் தலைகீழாக நிறைவேற்றவும் செய்கிறது. மூன்றாம் உலக நாடுகளைக் கபளீகரம் செய்யும் உலகமயமாக்கம், கோடிக்கணக்கான மக்களை வேரும் விழுதுமில்லாமல் நாதியற்றவர்களாக்கியிருக்கின்றது. இவர்கள் எல்லோரையும் சேவை நிறுவனங்கள் பராமரிக்க முடியாது என்பதை விடப் பராமரிக்க மறுப்பதில்தான் அவற்றின் குறைந்தபட்ச சேவையே தொடரமுடியும். 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்ற நிலை எங்கேயும் இல்லை.

அதனால்தான் அன்றாடம் ஈசலைப் போலப் பெருகி வரும் அநாதைகள், அரசு மருத்துவமனை, சீர்திருத்தப் பள்ளி, சிறை, குப்பை பொறுக்குவது முதல் ஏனைய உதிரித் தொழில்களில் ஈடுபடுவோர் சாலையோரச் சிறுவர்கள் போன்றே வாழ்க்கையைத் தள்ளுகிறார்கள். எனவே, எல்லாச் சேவை நிறுவனங்களும் புதியவர்களைச் சேர்ப்பதற்குப் பல கட்டுப்பாடுகளையும், வரம்புகளையும் வைத்திருக்கிறார்கள்.

மேலும் பல்வேறு காரணங்களினால் உருவாக்கப்படும் ஆதரவற்



றோரை நம்பிக்கையளித்து மறுவாழ்வு கொடுப்பது என்பதும் அநாதைகளை உற்பத்தி செய்யும் சமூக வாழ்க்கையை மாற்றாமல் சாத்தியமில்லை. ஆதலால், அநாதைகளுக்கு அடிமைகளுக்குரிய வாழ்வைத் தவிர வேறு எதுவும் கொடுக்க முடிவதில்லை. கூடவே, இன்றைய சேவை நிறுவனங்கள் பிரச்சினைகள் அதிகம் இல்லாத - மனவளர்ச்சியற்ற குழந்தைகளுக்குக் கல்வி போன்ற குறைவான எண்ணிக்கையிலிருக்கும் உட்பிரிவினரைத்தான் விரும்புகின்றனர். குற்றம் நடந்த இடம் எங்கள் ஸ்டேசன் எல்லையில் வராது என போலீசு தட்டிக் கழிப்பது போல சேவை நிறுவனங்கள் பிறரைக் கைகாட்டி விட்டுக் கதவை அடைத்துவிடுகின்றன.

உதவும் கரங்களின் எதிர்காலத் திட்டங்கள் கூட புற்றுநோய் மருத்துவமனை, மனவளர்ச்சி குன்றியவருக்குச் சிறப்புக் கல்வி மையம், பிண ஊர்தி வாங்குவது, ஊரகச் சத்துணவுத் திட்டம் போன்று குறிப்பான - பிரச்சினையில்லாத பிரிவினருக்கு உதவுவதாகவோ அல்லது பணம் திரட்டினால் செய்ய முடியும் என்றோதான் இருக்கிறது. மாறாக, நூற்றுக்கணக்கான அனாதைகளைக் காப்பாற்ற பல ஊர்களில் இல்லங்கள் தொடங்குவதாக இல்லை.

**குப்பைத் தொட்டியில் வித்யாகரே ஒரு குழந்தையை எடுக்கும் படத்தை விளம்பரம் செய்வதால், சம்பந்தப்பட்ட குழந்தைகளின் மனம் புண்படுமே என்பதை விட, இப்படித்தான் புரவலர்களிடம் காசு வாங்க முடியும் என்பதே பரிசீலனைக்குரியது.**

முதலீடு இல்லாமல் இலாபம் கிடைக்கும் தொழிலாகச் சேவை நிறுவனங்கள் மாற்றப்பட்டதும் அவை அதிகரிக்கக் காரணமாக இருக்கிறது. ஏழைகளை உருவாக்குவதற்குப் பல நிபந்தனைகள் போட்டு ஏழை நாடுகளுக்குக் கடன் கொடுக்கும் உலக வங்கி, வறுமை ஒழிப்புக்கும் கொஞ்சம் பணம் ஒதுக்கத் தவறுவதில்லை. உலக அளவில் இப்படி வரும் ஏராளமான பணத்தைப் பெறுவது மட்டுமே சேவை நிறுவனங்களில் ஒரு போட்டியைத் தோற்றுவித்துள்ளது. அரசிடம் அங்கீகாரம் கோரியிருக்கும் ஒரு சேவை நிறுவனம், அரசு ஆய்வாளர் சோதிக்க வரும்போது மட்டும் 10 குழந்தைகளை 10,000 ரூபாய் வாடகைக்குக் (!) கேட்டதை வேதனையுடன் குறிப்பிட்டார் வித்யாகர்.

''துன்பப்படும் ஒரு மனிதனைக் கடவுளே கைவிட்டு விட்டாலும் நாங்கள் விடமாட்டோம்...'' என்று உதவும் கரங்களின் விளம்பரங்கள் கூறினாலும் இங்கும் கடவுளே வந்தாலும் சேர்ந்து கொள்வது சுலபமல்ல. குப்பைத் தொட்டி, கோவில், மருத்துவமனை வளாகங்களில் வீசப்படும் பச்சைக் குழந்தைகளைக் காப்பாற்றுவதையே இந்நிறுவனம் தலையாய கடமையாகக் கொண்டுள்ளது. இதைத்தவிர ஏதோ ஒரு உறவு இருக்கும் குழந்தைகளோ, உறவில் வளர்ந்து விட்டு இடையில் வரும் சிறுவர்களோ இங்கு சேர்க்கப்படுவதில்லை. ''மந்தை மாதிரி குழந்தைகளைச் சேர்க்க முடியாது. படுக்கை காலியாக இல்லையென்றால் இல்லையென்றுதான் சொல்ல முடியும்'' என்று வித்யாகரும் நேர்மையாக ஒத்துக் கொள்கிறார். அதேபோன்று ஆதரவற்ற பெண்கள், மனநலமில்லாதோரும் கூட எவ்விதச் சார்பும், பிரச்சினைகளும் இல்லாதவர்களே சேர்க்கப்படுகிறார்கள்.

இன்று 1700 பேரைக் காப்பாற்றும் உதவும் கரங்களின் இருபது வருட வளர்ச்சியில் ஆண்டுக்கு 85 பேர் மட்டும் சராசரியாக அதிகரித்திருக்கிறார்கள். எனில் இடம் மறுக்கப்பட்டோரின் எண்ணிக்கை இதனினும் மிக அதிகமிருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. மேலும் தற்போதைய எண்ணிக்கைதான் உதவும் கரங்களின் அதிகபட்சத் தாங்குதிறன். இதைத் தாண்டி பெரிய அளவில் உதவும் கரங்களினால் உதவ முடியாது என்பதே உண்மை.

உதவும் கரங்களின் முக்கியக் கிளையான 'சாந்திவனம்' சென்னையை அடுத்த திருவேற்காட்டில் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இங்கே சுமார் 800 பேர் பராமரிக்கப்படு கின்றனர். இதனருகே உதவும் கரங் களால் நடத்தப்படும் இராமகிருஷ்ணா வித்யா நிகேதன் என்ற சுமார் 1700 மாணவர்கள் படிக்கும் பள்ளிக்கூடமும் உள்ளது. அருகாமை கிராமங்களிலி ருந்து பெரும்பான்மையான மாண வர்கள் வருகிறார்கள். உதவும் கரங் களின் 300 பிள்ளைகள் இங்கு படிக்கின் றனர். காந்தியின் சபர்மதி ஆசிரமத்தை எதிர்பார்த்துச் சென்ற நமக்கு 'சாந்தி வனத்'தின் நட்சத்திர விடுதிச் சூழ்நிலை மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது.

பெரிய நிறுவனங்களை நினைவு படுத்தும் வரவேற்பறை, ஒவ்வொரு பிரிவினருக்கும் பல பெரிய கட்டி டங்கள், விசாலமான சாப்பாட்டு அறைகள், கருத்தரங்க அறை, நூலகம், கைவினைத் தொழிற்கூடங்கள், மும்மதக் கோவில்கள் அனைத்தும் அதீதச் சுத்தம் - அமைதி - அழகுடன் காணப்பட்டன.

தலைமை அலுவலகத்தில் அவசரத் தேவைகளை அரிசி, பால் பவுடர் என்று எழுதி வைத்திருந்தார்களே, இங்கு இவ்வளவு ஆடம்பரமா என்ற கேள்வி எல்லோருக்கும் எழும். அநாதை களைப் பிச்சைக்காரர்கள் போல நடத்த வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் இங்கே பிள்ளைகளுக்குத் தரப் படும் பராமரிப்பு வசதி மிக அதிகம். குழந்தைகளுக்காகக் கட்டிடங்களா, அந்தக் கட்டிடங்களுக்காகக் குழந்தை களா என்ற அளவிற்கு அங்கே அநாதை களுக்கும் - ஆடம்பரங்களுக்கும் முரண்பாடு இருந்தது.

நம்முடன் சுற்றிக் காட்டிய உதவும் கரங்களின் உதவியாளரோ அங்குள்ள குழந்தைகள், அறைகள் என்று உயிருள் ளவைக்கும், உயிரற்றவைக்கும் வேறு பாடு இல்லாத வேகத்தில் ஒரு சுற்றுலா வழிகாட்டி போலப் புள்ளி விவரங் களை ஒப்பித்தார். மனிதகுலத்தின் மனச் சுமைகளை மொத்தமாய்ச் சுமப்பது போன்று காட்சியளிக்கும் அநாதைகள் இல்லத்தை ஒரு காட்சிச்சாலை போல எப்படி வருணிக்க முடியும்? ஒரு தொண்டர் நம்மை "ஃபீடிங் பார்ட்டியா, (feeding party) நன்கொடை தருபவர் களா?" என்று கேட்டார். அப்போது தான் புரிந்தது. அங்கு நாம் பார்த்த தோற்றங்களும், கேட்ட வார்த்தை களும் உதவும் கரத்திற்கு நன்கொடை தரும் புரவலர்களுக்காக வடிவமைக்கப் பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

உதவும் கரங்களின் அன்றாடச் செலவு சுமார் ரூ. 60,000 முதல் 80,000



**வித்யாகர், உதவும் கரங்கள் நிறுவனர்.**

வரை எனும்போது அதன் ஆண்டு செல வுத்திட்டம் 2 கோடியைத் தாண்டுகிறது. இவ்வளவு பெரிய தொகை இல்லாமல் நிறுவனம் இயங்காது என்ற உண்மை அந்தத் தொகையை வசூலிப்பதற்கேற்ற வாறு செயல்படவேண்டும் என்று செயற்கையாய் மாறிக் கொள்கிறது. நன்கொடை திரட்டுவதற்கான முயற்சி களை உதவும் கரங்கள் மிகுந்த முனைப் புடன் மேற்கொண்டு வருகிறது.

பெரிய நிறுவனங்களின் விளம்பர உத்தியின் தரத்துக்கு இணையாக உதவும் கரங்களின் துண்டறிக்கைகள், செய்தி ஏடுகள், வித்யாகரின் வரலாறு, குழந்தைகளின் கதைகள், பிரபலங் களின் பாராட்டு முதலியவை பல்வேறு பிரிவினரிடையே விநியோகிக்கப்படு கின்றன. ஒரு குழந்தையின் மொத்தச் செலவை ஏற்றுக் கொண்டு பெயரளவு தந்தை / தாயாக இருப்பது, 50,000 செலவில் கணினி வாங்கிக் கொடுப் பது, ஒரு வகுப்பறை கட்டுவதற்கான 1,50,000 ரூபாய் கொடுத்தால் புரவலர் பெயர் வகுப்பில் பொறிக்கப்படும் என பல நன்கொடைத் திட்டங்கள் அதில் அடக்கம்.

**ஒரு குழந்தையின் வளர்ப்புக்கே உலகப் பிரச்சினை போல் சலித்துக் கொள்ளும் சமூகத்தில் எத்தனைக் குழந்தைகள், நோயாளிகள், ஆதரவற்ற பெண்கள், அன்றாடச் சாவுகள், தினசரி வரும் புதிய சோகங்கள்... அங்கேயிருந்த 20 நிமிடத்தில் உதவும் கரங்களின் 20 ஆண்டு வரலாற்றை யூகித்த போது சற்றே பயமாகவும், பிரமிப்பாகவும் இருந்தது.**

ஒரு துண்டறிக்கையில் குழந்தை களின் சிறு பிராயம் மற்றும் வளர் பருவப் புகைப்படங்களைப் போட்டு, அவர்களின் பின்னணியை - குப்பைத் தொட்டியா, கள்ள உறவா, எய்ட்ஸா என்று விவரித்து உதவி செய்யக் கோரு கிறார்கள். மற்றொன்றில், வித்யாகரே குப்பைத் தொட்டியில் ஒரு குழந் தையை எடுக்கும் படம் உள்ளது. இதனால் சம்பந்தப்பட்ட குழந்தை களின் மனம் புண்படுமே என்பதைவிட இப்படித்தான் புரவலர்களிடம் காசு வாங்க முடியும் என்பதே பரிசீலனைக்கு உரியது.

உதவும் கரங்களின் எந்த விளம்ப ரமும், அநாதைகளையும், அபலைக ளையும் உருவாக்கிய புரவலர்களையும் உள்ளிட்ட சமூகத்தின் மீது விமரிசனம் செய்து உதவிகளைக் கடமையாய் உண ருங்கள் என்று கேட்கவில்லை; தனித் தனிக் கதைகள் மூலம் உருவான அநா தைகள் மீது சற்றுக் கருணை காட்டுங்கள் என்று இறைஞ்சியோ, எங்களது தரமான சேவையைப் பார்த்தாவது உதவுங்கள் என்றோதான் கேட்கிறது. இந்த அணுகுமுறைதான் உதவும் கரங்களில் இருக்கும் அபலைக ளிடம் அடிமைத்தனத்தையும், தாழ்வு மனப்பான்மையையும், பார்க்க வரும் புரவலர்களிடம் குற்ற உணர்வுக்குப் பதில் பெருமிதக் கருணையையும் ஏற்ப டுத்தியிருக்கின்றது.

இதுபோக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் நன்கொடை திரட்டுவ தற்கென்றே அலுவலகங்கள் வைத்தி ருக்கும் உதவும் கரத்திற்கு வெளிநாடு இந்தியர்களிடமிருந்தும் கணிசமான பணம் வருகிறது. "உதவும் கரங்கள் தொடங்கி 15 வருடங்கள் வரை வெளி நாட்டிலிருந்து பணம் வாங்குவதில்லை என்றிருந்தேன். தற்போது அதிகரித்து வரும் தேவை, விலைவாசி உயர்வு கார ணமாக வாங்கத் தொடங்கியிருக் கிறோம். எங்களைப் போன்ற சேவை நிறுவனங்கள் பல இந்தியாவின் வறு மையை வெளிநாடுகளில் விற்றுக் கொண்டிருக்கிறோம்" என்று 'தவிர்க்க இயலாத' மாற்றத்தை வித்யாகர் ஏற்றுக் கொள்கிறார். 'சாந்திவனத்'தின் ஆடம் பரமும், அமைதியும் கூட வெளி நாட்டுப் புரவலர்களின் அழகியலுக் கேற்ப உருவாகியிருக்கலாம்.

www.padippakam.com


சுய வருமானத்திற்காக உதவும் கரங்கள் உருவாக்கியிருக்கும் ஒரு வணிக நிறுவனம் 'காயத்ரி தோட்டக் கலை' ஆகும். பங்களாக்களுக்கும், பெரும் நிறுவனங்களுக்கும் உள்ள ரங்கு - வெளியரங்கு தோட்டம், செயற்கை ஊற்று - நீர்வீழ்ச்சி - நீச்சல் குளம் என்று இதுவும் ஐந்து நட்சத்திர விடுதிகளை அழகுபடுத்தும் மேட்டுக் குடிச் சேவையாகும். மலிவான இலவச உடலுழைப்பை உதவும் கரங்களின் உறுப்பினர்கள் - வேலை செய்வது அவர்களது மன ஆரோக்கியத்திற்கு நல்லது என்றாலும் - வழங்க, காயத்ரியின் தலைமை நிர்வாகிகள் ஐந்து இலக்கச் சம்பளத்தில் நவீன கார்களில் பறக்கிறார்கள்.

''நான்கு பேரிடம் கையேந்துவதை விட நாமே சம்பாதிப்பதற்கு முயன்றால் என்ன என்றுதான் ஆரம்பித்தோம்'' என்கிறார் வித்யாகர். உதவும் கரங்கள் தனது சொந்தக் காலில் நிற்பதற்குக் கூடச் சாதாரண மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு தொழிலை ஆரம்பித்திருந்தால் அது ஆதரவற்றோர் மீது பெரும்பான்மை மக்கள் உணர்வுபூர்வமாக நெருங்குவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் 'காயத்ரி'யின் கதை முற்றிலும் வணிகக் கணக்கில் மேட்டுக்குடியின் ஆதாயத்தை எதிர்பார்த்து மட்டும் நடத்தப்படுகிறது. மேலும் இந்த அணுகுமுறை ஆதரவற்றோரைக் காப்பாற்றுவதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதைவிட, அவர்களை வைத்து நடத்தும் தொழிலின் சிக்கல்களைத் தீர்ப்பதாகவே மாறும்.

கூடவே சேவைபுரியும் தொண்டர்கள், வணிகம் புரியும் நிர்வாகிகள் என்று பிளவும் ஏற்படும். இதில் யாருக்கு மதிப்பும், அதிகாரமும் வரும் என்பதை விளக்கத் தேவையில்லை. மேலும் இத்தகைய தொழில் - வணிகம் நடத்தவேண்டும் என்ற அவசியமில்லாமலேயே எல்லாச் சேவை நிறுவனங்களிலும் குறிப்பிட்ட வளர்ச்சிக்குப் பிறகு நிர்வாகிகளே தலைமைக்கு வருகிறார்கள்.

உதவும் கரங்கள் ஆரம்பித்த வித்யாகரே தற்போது களப்பணிகள் மட்டும் அதிகம் பார்ப்பதாகவும், உயர் பதவிகளில் ஓய்வு பெற்ற அதிகாரிகள் பலர் ஒரு குழுவாக அமைத்து உதவும் கரங்களின் நிர்வாக வேலைகளுக்குப் பொறுப்பேற்றிருப்பதாகவும் தெரிவித்தார். நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தவேண்டும் என்று தொழில் முறையில் இயங்கும் இக்குழுவைவிட அநாதைகளைக் கடைத்தேற்றும் களப்பணியாளர்களுக்கு முக்கியத்துவம் இருக்க வாய்ப்பில்லை. 1700 பேர்களுக்கு உணவும் உடையும் கொடுத்துப் பராமரிப்பதற்கான நிறுவன - நிர்வாக வேலைகளின் அவசியம், அதே 1700 பேர்களின் தனிப்பட்ட வாழ்க்கை - சிந்தனை முன்னேற்றத்தைக் கவனிக்கும் களப்பணி வேலைகளை இரண்டாம்பட்சமாக்கி விடுகிறது.

''மலரும் பூக்கள் அனைத்தும் இறைவனைச் சேர்வதில்லை. அதேபோல எல்லோரும் சேவை செய்ய முன்வருவதில்லை. இது ஒரு தவம் போன்றது''



**பல்வேறு காரணங்களினால் உருவாக்கப்படும் ஆதரவற்றோரை நம்பிக்கையளித்து மறுவாழ்வு கொடுப்பது என்பதும் அநாதைகளை உற்பத்தி செய்யும் சமூக வாழ்க்கையை மாற்றாமல் சாத்தியமில்லை. ஆதலால், அநாதைகளுக்கு அடிமைகளுக்கு உரிய வாழ்வைத் தவிர வேறு எதுவும் கொடுக்க முடிவதில்லை.**

எனத் தொண்டர்களின் பற்றாக்குறையைத் தெரிவிக்கிறார் வித்யாகர். மேலும் முன்பை விட தொண்டர்கள் எண்ணிக்கை குறைந்திருப்பதாகவும் தெரிவித்தார். நிறுவன வளர்ச்சிக்கு நேரெதிராக இருக்கிறது தொண்டர்கள் பற்றாக்குறை.

உதவும் கரத்திற்குத் தொண்டு செய்ய விரும்புபவர்கள், முதலில் சிறிது காலம் தங்கிப் பயிற்சி பெற வேண்டும். அதில் அவர்களது விருப்பம் உறுதியானால் தொண்டராக ஏற்கப்படுவார்கள். திருமணம் செய்து கொண்டு நீடிப்பதைப் பொதுவாக ஊக்குவிப்பதில்லை. தொண்டர்களின் பொறுப்புக்கேற்றவாறு ஊக்கத்தொகை உண்டு. மொத்தத்தில் தொண்டர்களுக்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, ஊதியம் பெறும் ஊழியர்கள் என்ற நிலையை நோக்கி உதவும் கரங்கள் செல்கிறது. அப்படியும் தொண்டர்கள் தேவைப்படும் அளவில் இல்லை.

ஒருவர் தனது சொந்த வாழ்க்கையை ஒரு பொதுநலனுக்கு அர்ப்பணிக்க விரும்புவது பிரச்சினையில்லை. ஆனால் அந்த அர்ப்பணிப்பைத் தொடருவதுதான் பிரச்சினை. இங்கே ஒரு தொண்டரைச் சுற்றியிருக்கும் சூழல் என்ன? முடிவேயில்லாத அநாதை அபலைகளின் கண்ணீர்க் கதைகள், கதறல்கள், பொறுமையைச் சோதிக்கும் மனநோயாளிகள், அடுத்தது யாரெனக் காத்திருக்கும் பிண ஊர்தி வண்டி, இடைவெளியே இல்லாத பராமரிப்பு வேலைகள் இன்னபிறச்சூழலில் ஒரு மனிதன் உடைந்து போவதோ, கல்லாகி இறுகுவதோ, விலகிச் செல்வதோ ஆச்சரியமல்ல.

90-களின் ஆரம்பத்தில் எய்ட்ஸ் நோயாளிகளுக்காகக் 'கருணாலயம்' கிளையை ஆரம்பித்த போது, பல தொண்டர்கள் முன்வராத நேரத்தில், மதுரையில் அரசு வேலையை ராஜினாமா செய்து தொண்டரான சுந்தரி என்பவர் அந்த எய்ட்ஸ் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டார். அவரே இன்று உதவும் கரத்தில் இல்லை எனில் நிலைமையைப் புரிந்து கொள்ளலாம்.


ஒரு தொண்டர் அவரது அர்ப்பணிப்பை, அவர் மட்டுமே தக்க வைத்துக் கொள்ளப் போராடும் இந்தத் தனி மனித முயற்சி பொதுவில் வெற்றி பெற வாய்ப்பில்லை. மாறாக அவரது அர்ப்பணிப்பு, சமூக நடைமுறை பொறுப்புடன் பிணைக்கப்படும்போதே தொடரவும், போராடவும் இயலும். அநாதைகள் - அபலைகளை இரக்கமின்றி உருவாக்கும் இந்தச் சமூக அமைப்பின் மீது கோபம் கொண்டு போராடும் ஒருவரே அனாதைகளுக்கான தனிப்பட்ட சேவைகளையும் இறுதிவரை செய்ய முடியும். ஆனால் சேவை நிறுவனத் தொண்டர்களுக்கு இந்த வாய்ப்பில்லை என்பதால் தொண்டர்களாக ஆரம்பிக்கும் வாழ்க்கை விரைவில் முடிகிறது அல்லது ஊதியம் பெறும் ஊழியர் வாழ்க்கையாக மாறுகிறது.

வித்யாகரைப் பொறுத்தவரை இந்தத் தொண்டர்களின் சேவையைப் பலரறிய வைப்பதன் மூலமும், பத்தி


படிப்பகம்

www.padippakam.com

ரிக்கை நேர்காணல்கள், விழாக்களில் அறிமுகப்படுத்தியும் உற்சாகப்படுத்துகிறார். இந்தப் பணியில் தொடர்ந்து ஈடுபட அவரை உற்சாகப்படுத்துவது எது வென்ற கேள்விக்கு 'குழந்தைகள்' என்றார். உண்மையில், உதவும் கரங்கள் என்ற நிறுவனமே அவர் பார்த்துப் பராமரித்த குழந்தை என்பதால், அந்தக் குழந்தையை விட்டு விட்டு வெளியேறும் பேச்சுக்கே இடமில்லை. மற்றபடி தொண்டர்கள் பற்றாக்குறையை எப்படிச் சமாளிக்கிறார்கள்?



எய்ட்ஸ் குழந்தைகளை பராமரிக்கும் சுந்தரி இன்று உதவும் கரங்களில் இல்லை.

சொந்த வாழ்க்கை வாழ முடியாத பல அபலைப் பெண்கள் உதவும் கரத்தில் பராமரிப்பு வேலைகளைச் செய்கிறார்கள். வருடம் ஒருமுறை வீட்டிற்குச் சென்று வரும் இவர்களுக்கு இங்கே கிடைக்கும் வாழ்க்கைக்கான கைம்மாறாக அவ்வேலைகள் செய்கிறார்கள். இரண்டாவதாக உதவும் கரத்திலேயே வளர்ந்த பெண்கள் தொண்டர்களாக இருக்கிறார்கள். ஏனைய பராமரிப்பு வேலைகள், சமையல், கட்டிடங்கள், பொருட்களைச் சுத்தம் செய்வது, துணி துவைப்பது, குழந்தைகளைப் பராமரிப்பது போன்றவை இல்லத்தில் இருக்கும் அனைவருக்கும் வயது, உடல்திறன், கல்விக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படுகிறது. மேல்சாதி - மேல்தட்டு வர்க்கப் பின்னணி கொண்ட, வீட்டை விட்டு வெளியேறிய முதியவர்கள் சிலரும் அலுவலக, நிர்வாக வேலைகளைச் செய்கிறார்கள். மொத்தத்தில் வேறுவழியின்றி ஆதரவற்றோர் தம்மையே பராமரித்துக் கொள்வதுதான் உதவும் கரத்தின் யதார்த்தம்.

தொண்டர்களின் கதை இது வென்றால் அங்கிருக்கும் ஆதரவற்றவர்களின் நிலை என்ன? 'கோகுலத்தில்' ஆரம்பப் பள்ளி படிக்கும் குழந்தைகள், 'பாசமலர்களில்' கைக்குழந்தைகள், 'மொட்டுகள் மானசா'வில் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள், 'தாயகத்தில்' மனநிலை பாதிக்கப்பட்ட எய்ட்ஸ் நோயாளிப் பெண்கள், 'குட்டி பாப்பாவில்' எய்ட்ஸ் குழந்தைகள் என ஒவ்வொரு கட்டிடத்திலும் ஒவ்வொரு பிரிவினர் இருக்கின்றனர்.

குழந்தைகள் நம்மைப் பார்த்த உடனேயே எதுவும் கேட்காமல் கை குலுக்கிச் சுய அறிமுகம் செய்துவிட்டுப் போய்விடுகிறார்கள். புரவலர்களுக்காக வடிவமைக்கப்பட்ட செயற்கையான பழக்கம் என்பதோடு ஒவ்வொரு நாளும் பலரிடம் செய்ய வேண்டியிருப்பதால் சலிப்பும் இருக்கிறது. அனைவரும் தங்கள் பெயருடன் வித்யாகர் பெயரையும் சேர்த்துச் சொல்கிறார்கள். அப்பா என்று அழைக்கிறார்கள். அப்பா தனக்கு வாங்கிக் கொடுத்த உடை, நகை பற்றி மகிழ்கிறார்கள். இளம் பெண்களோ அப்பா தமக்கு மணம் செய்து வைப்பார் என்றும் தெரிவிக்கிறார்கள்.

மற்றபடி இவர்களது வாழ்க்கை...? வசதிகள் நிறைந்த சிறை வாழ்க்கைதான். நாள் முழுவதும் பராமரிப்பு, கல்வி, விளையாட்டு, கைவினைப்பயிற்சி, நாட்டியம் என்றிருந்தாலும் வெளியுலகைப் பார்க்காத, பார்க்க முடியாத ஏக்கம் இருக்கிறது. தங்கள் வாழ்க்கை இதுதான் என்பதையும், புரவலர்கள் மூலமே வாழ்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரிகிறது. பள்ளியில் படிக்கும் ஏனைய குழந்தைகளின் பெற்றோர்களைப் பார்க்கும் உதவும் கரத்தின் குழந்தைகளுக்கு எது மகிழ்ச்சியான வாழ்க்கை என்பதும் தெரியாததல்ல. ஆள் ஆரவம் அதிகம் கண்டிராத எய்ட்ஸ் குழந்தைகளோ தங்களைத் தூக்கிக் கொஞ்சுமாறு கண்கள், கைகளால் சாடைகாட்டி வற்புறுத்துகிறார்கள்.

அனாதைகளின் தாழ்வு மனப்பான்மையை அகற்றி, தன்னம்பிக்கையையும், வாழ முடியும் என்ற உணர்வையும் எப்படித் தருகிறீர்கள் என்றதற்கு, ''ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் பட்டுப்பாவாடை, ஏதாவது ஒருநகை பரிசளிக்கிறேன். இதுவரை 25 பெண்களுக்கு திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். இவையெல்லாம் அவர்களுக்கு ஏனையோரைப் போல வாழ முடியும் என்ற நம்பிக்கை கொடுக்கும்'' என்றார் வித்யாகர்.

காதலும், தாய்மையும் உயிரியல் ரீதியாகவும், குடும்பம், சமூகக் குழுக்கள் உளவியல் ரீதியாகவும் சக மனிதனை நேசிப்பதற்கு அடியெடுத்துக் கொடுக்கின்றன. இவை மறுக்கப்படுவதால்தான் அநாதைகளே உருவாகின்றனர். சேவை நிறுவனங்களின் சூழ்நிலையில் உயிருக்கும் குறைந்தபட்ச வாழ்க்கைக்கும் மட்டுமே அவர்கள் உத்தரவாதம் பெறுகின்றனர். இது காரியவாதம், உதிரித்தனம் கலந்த அடிமைத்தனத்தை உருவாக்குகிறது. வாழ்வதற்கே அடிக்கடி நன்றிக்கடன் செலுத்த வேண்டியிருக்கும் வாழ்க்கையில் பொதுவான ஆளுமை வளர்வதற்கோ, அர்த்தமுள்ள வாழ்க்கையின் கனவுக்கோ வழியில்லை.

நகை, உடை, திருமணம் போன்றவை கடைத்தெருவை ஆசை

**அநாதைகள் — அபலைகளை இரக்கமின்றி உருவாக்கும் இந்தச் சமூக அமைப்பின் மீது கோபம் கொண்டு போராடும் ஒருவரே அனாதைகளுக்கான தனிப்பட்ட சேவைகளையும் இறுதிவரை செய்ய முடியும். ஆனால் சேவை நிறுவனத் தொண்டர்களுக்கு இந்த வாய்ப்பில்லை என்பதால் தொண்டர்களாக ஆரம்பிக்கும் வாழ்க்கை விரைவில் முடிகிறது.**

www.padippakam.com



**புரவலர்கள் மூலமே வாழ்கிறோம் என்பது அவர்களுக்குத் தெரியாதது அல்ல. பள்ளியில் படிக்கும் ஏனைய குழந்தைகளின் பெற்றோர்களைப் பார்க்கும் உதவும் கரத்தின் குழந்தைகளுக்கு எது மகிழ்ச்சியான வாழ்க்கை என்பதும் தெரியாததல்ல. ஆள் ஆரவம் அதிகம் கண்டிராத எய்ட்ஸ் குழந்தைகளோ தங்களைத் தூக்கிக் கொஞ்சுமாறு கண்கள், கைகளால் சாடைகாட்டி வற்புறுத்துகிறார்கள்.**

**வாழ்நாளை இழந்து கொண்டிருக்கும் இளவயது எய்ட்ஸ் தாய்மார்கள்.**

யுடன் நோக்கும் ஏழைச் சிறுமியின் இயலாமை உணர்வையே அதிகரிக்கும். உதவும் கரங்களை ஒரு பொருட்காட்சியைக் காணச் செல்லும் குதூகலுத்துடன் பார்க்க நவீன கார்களில் வந்திறங்கும் மேட்டுக்குடிக் குடும்பமும், அவர்கள் தரும் ஆடம்பர - பழைய துணியும் இல்லத்துப் பிள்ளைகளின் தன்னம்பிக்கையை அல்ல தாழ்வுமனப் பான்மையைத்தான் தூண்டி விடுகின்றன.

இதுபோல இந்தியன் ஏர்லைன்ஸ், டி.வி.எஸ்.கிளாஸ்கோ, கன்னிமரா - உட்லண்ட்ஸ் ஓட்டல்கள் இன்னபிற நிறுவனங்கள் தங்களது மீந்துபோன உணவை உதவும் கரத்திற்குத் தொடர்ச்சியாக வழங்குகிறார்கள். அன்றாடம் எளிய உணவு உண்ணும் பிள்ளைகள், இவர்களின் ஆடம்பர உணவை அவ்வப்போது ருசிக்கும் போதும் மேற்கண்ட விளைவே ஏற்படும். எனவே எளியோர் வலியோரைச் சார்ந்தும், இறைஞ்சியும் வாழவேண்டும் என்ற யதார்த்தம் வலிமையான ஒரு வாழ்க்கைக் கண்ணோட்டத்தை அநாதைகளுக்கு வழங்கி விடாது.

இந்த மறுவாழ்வு கொடுக்கும் பிரச்சினை, பிறவி அபலைகளை விட இடையில் அபலைகளாக மாறியவர்களுக்கு அதிகம். இல்லத்தின் கட்டுப்பாடும், எளிய வாழ்க்கையும், அடிமை மனமும் அவர்களுக்கு உறுத்துகின்றது. பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து வந்த பெண்கள் இங்கு இருக்கும் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கை பிடிக்காமல், உதவும் கரங்கள் தந்த மறுவாழ்வு வசதிகளை விரும்பாமல் திரும்பிச் சென்றதை வித்யாகரே நினைவு கூர்கிறார்.

இனி உதவும் கரத்திற்கு ஆதரவளிக்கும் புரவலர்களைப் பார்க்கலாம். ''எங்களுக்குப் பணஉதவி செய்பவரின் நோக்கத்தையோ, பின்னணியையோ மதிப்பீடு செய்ய முடியாது'' என்று எச்சரிக்கையுடன் பேசுகிறார் வித்யாகர். ஏற்கெனவே மீந்துபோன உணவு தரும் நிறுவனங்களைப் பார்த்தோம். மேலும் இந்நிறுவனங்களில் பணியாற்றும் உயர் சம்பளப் பிரிவினர் வருமான வரி விலக்கிற்காக உதவும் கரத்திற்கு நன்கொடை தருகின்றனர். சென்னையின் வசதியான நட்சத்திர மருத்துவமனைகள் உதவும் கரங்களின் உறுப்பினர்களுக்காகச் சலுகை விலையில் சிகிச்சையளிக்கின்றன. இதே மருத்துவமனைகள்தான் பெரும்பான்மை மக்களுக்கு மருத்துவச் சிகிச்சையை எட்டாத உயரத்தில் வைத்திருக்கின்றன.

சென்னைக்கு வரும் பிரபலங்கள், முக்கியப் புள்ளிகள் தவறாமல் உதவும் கரங்கள் போன்ற இல்லங்களுக்கும் வருவார்கள். ''உதவும் கரத்திற்கு வந்தது இதயத்தைச் சிலிர்க்க வைக்கும் ஒரு அனுபவம்'' என்று ஐஸ்வர்யா ராயின் விளம்பரம் அவர்களின் துண்டறிக்கையில் இருந்தது. உலக அழகிக்கும் உதவும் கரத்திற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டபோது, ''நான் அவரைக் கூப்பிடவில்லை. ஐஸ்வர்யா ராய் உலக அழகியானதும், பெப்சி நிறுவனத்துடன் செய்திருக்கும் ஒப்பந்தப்படி ஒரு அநாதை இல்லத்துக்கு வரவேண்டுமாம். நான் ஒரு நிபந்தனை போட்டேன். எய்ட்ஸ் விழிப்புணர்வுக்காக ஒரு எய்ட்ஸ் குழந்தையைத் தூக்கி முத்தமிடுவது போல புகைப்படம் எடுக்க வேண்டும். அந்த அம்மா பம்பாயில் தனது மருத்துவர்களுடன் ஆலோசித்து தயக்கத்துடன், அரை குறை மனதுடன் ஒப்புக் கொண்டார்'' என்று பிரபலங்களின் கருணையைப் போட்டுடைத்தார் வித்யாகர்.

உதவும் கரங்களுடன் நீண்டு விட்ட நமது பயணத்தை இத்துடன் முடித்துக் கொள்வோம். மீண்டும் பழைய காட்சிகள்... சாகப் போகிறவர்கள் கணக்கு, அரிசி உடனடித் தேவை, ஆடம்பரக் கட்டிடங்கள், ஹலோ அங்கிள் - குழந்தைகள் அறிமுகம், காலைச் சுற்றும் எய்ட்ஸ் குழந்தைகள், ஒரு கட்டிடத்தைச் சுத்தம் செய்து கொண்டிருந்த அந்த ஊனமுற்ற சிறுமி, அப்பா திருமணம் செய்வார் என்று ஆசையுடன் சொன்ன அந்தப் பெண், வாசனைத் திரவியத்தில் குளித்து வந்த அந்த அமெரிக்க இந்தியக் குடும்பம், சுற்றுலா பாணியில் விவரித்த அந்த உதவியாளர், நேரம் செல்லச் செல்ல உதவும் கரங்களின் அனைத்துப் பரிமாணங்களையும் வாழ்க்கை அனுபவத்தையும் பகிர்ந்து கொண்ட வித்யாகர்....

வெளியேறினோம். இந்தச் சமூக அமைப்பின் கொடுமைகளுக்குப் பயந்து கொண்டு தாங்களே கட்டிய அந்த மாபெரும் சிறையில் தங்களையே பிணைத்துக் கொண்டு கைதிகளாக வாழும் அந்தக் குழந்தைகளை, மக்களை நினைக்கும்போது கண்ணீர் வருகிறது. இந்த மாயச் சிறையிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டிய கடமைக்காக ஈரம் கசிந்த கண்கள் மெல்ல மெல்ல சிவக்க ஆரம்பித்தது.

**- செய்தியாளர்கள் உதவியுடன் இளநம்பி.**



படிப்பகம்

www.padippakam.com


















## திருநெல்வேலிக்கு கிறிஸ்தவம் வந்தது

ரூ. 60.00 பக். 86

நெல்லை, அதன் சுற்று மாவட்டங்களில் 15-ஆம் நூற்றாண்டிலிருந்து கிறித்தவ மதம் வளர்ந்த விவரங்களைத் தொகுத்திருக்கிறார்கள். ஐரோப்பிய, உள்ளூர் பாதிரியார்கள், பிரபலங்கள், தனிநபர்களின் பங்கு சுருக்கமாகக் கால வரிசைப்படி பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அக்காலச் சாதிய நிலை பற்றி ஒரு சில செய்திகள் வந்தாலும் பார்ப்பனியச் சாதிய - சமூக - பொருளாதார அமைப்பு, கிறித்தவ மத மாற்றத்தின் காரணங்கள் - விளைவுகள், அத்துடன் காலனிய - நிலவுடைமை வர்க்கத் தொடர்புகள் ஆகியன குறித்த ஆய்வு, கண்ணோட்டம், விவரங்களிலிருந்து உண்மையைத் தேடுதல் இந்நூலில் இல்லை.

*ஆசிரியர் :* **டேவிட் பாக்கியமுத்து**

*வெளியீடு :* **யாதுமாகி பதிப்பகம்,**
37/17, இராமசாமி கோவில் சன்னதித் தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627 002.
தொ.பேசி (0462) 2560083.

## தப்பாட்டம்

(சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்ட நாவல்)

ரூ. 100.00 பக். 318

தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான மேல்சாதி அடக்குமுறை, அரசு அலட்சியம், உள்சாதி முரண்பாடு, 'மார்க்சிஸ்டு' கட்சியின் பங்களிப்பு, சுயசாதி துரோகிகள் என அனைத்து அம்சங்களும் ஆசிரியரின் 'அனுபவவாதப்' பார்வையிலிருந்து 'எளிமை'யுடன் எடுத்துச் சொல்லப்படுகின்றன. அதனாலேயே தாழ்த்தப்பட்ட மக்களை பிற உழைக்கும் மக்களுடன் இணைப்பது குறித்த சிக்கலை, வழியை, அவசியத்தை, போராட்டத்தை உணர்வுபூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் புரிந்து உணர்த்துவதில் இந்நாவல் பலவீனமாக இருக்கிறது.

*ஆசிரியர் :* **சோலை சுந்தரபெருமாள்**

*வெளியீடு :*
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 98.

## தப்புச் சத்தம்

ரூ. 30.00 பக். 114

மேற்கண்ட 'தப்பாட்டம்' நாவல் குறித்து பல்வேறு பத்திரிக்கைகளில் வெளிவந்த 28 விமர்சனங்களின் தொகுப்பு. நாவலையும், இந்நூலையும் சேர்த்துப் படித்து தோழர்கள் விவாதிக்கலாம்.

*வெளியீடு :* **வண்டலுக்காக,**
கமலநாதன், 104, புதுத்தெரு, திருவாரூர்.

## சங்கர மடத்தின் உண்மை வரலாறு

ரூ. 25.00 பக். 80

கும்பகோணத்திலிருந்து 150 வருடங்களுக்கு முன்பு தோன்றிய காஞ்சி மடம், 1200 ஆண்டுகளுக்கு முன்பே அவதரித்ததாம். இந்த டுபாக்கூர் வரலாறு, சீனியரின் வருண வெறி, ஜெயேந்திரனின் ஆணாதிக்க வெறி, ஓடிப்போன வரலாறு, காஞ்சி நிகர்நிலைப் பல்கலையில் சாதிவெறி - என சங்கர மடத்துச் சதிகளின் உண்மைத் தொகுப்பு.

*ஆசிரியர்:* **அருணன்**

*வெளியீடு:* **வசந்தம் வெளியீட்டகம்,**
6-4/23 முதலாவது குறுக்குத் தெரு,
விஸ்வநாதபுரம், மதுரை - 14.

## அடிமை அல்லாவின் ஆணை

ரூ. 10.00 பக். 24

இந்து மதவெறியர்கள் எப்படி தம் பிற்போக்கான பழமைவாதத்தை நிலைநாட்ட முயற்சி செய்கிறார்களோ, அப்படித்தான் இசுலாமியப் பழமைவாதிகளும் என்பதை இந்நூல் நிரூபிக்கிறது. ஆண்டான் - அடிமை, பணக்காரன் - ஏழை, பெண்ணடிமைத்தனம் போன்ற பேதங்கள் இசுலாமிய மறைநூல்களிலேயே உள்ளதை ஆதாரத்துடன் எடுத்து இயம்புகிறது இந்நூல்.

*ஆசிரியர் :* **சாகித்**

*வெளியீடு :* **பறையோசை பதிப்பகம்,**
161, பி. அழகாபுரி, கீழசெவல்பட்டி - 630 205.

*விமரிசனங்கள் தொடர்புக்கு:*
சாகித்,
6/103, மேற்கு தெரு,
நம்புதாளை - 623 403.

## இதுதான் பார்ப்பன ஆட்சி

ரூ. 5.00 பக். 42

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த சத்திய மூர்த்தி அய்யர், அப்புறம் இராஜாஜி, ஆர். வெங்கட்ராமன் காலத்தில் பார்ப்பன ஆதிக்கத்தை சில சம்பவங்களினூடாக விளக்கும் ஆசிரியர், தற்போது ஜெயாவின் பார்ப்பனப் பாசிச ஆட்சியின் அனைத்து அடக்கு முறைகளையும் ஒன்று விடாமல் தொகுத்து விளக்குகிறார். பாசிச ஜெயா சசிகலா கும்பலின் பேயாட்சியை மக்களிடம் பேச விரும்பும் ஒவ்வொரு பேச்சாளருக்கும் இந்நூல் ஒரு ஆவணம் போல் பயன்படும்.

ஆசிரியர்: **நாத்திகம். பி. இராமசாமி**

வெளியீடு: **நாத்திகம்,**
97/55, என். எஸ். கிருஷ்ணன் சாலை,
கோடம்பாக்கம், சென்னை - 24.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/PMG (CCR)/239/03-05

www.padippakam.com



**மறுகாலனிய, பார்ப்பனியப் பண்பாட்டு படையெடுப்புக்கெதிரான போர் முழக்கம்**

# தமிழ் மக்கள் இசை விழா

**பதினொன்றாம் ஆண்டு**

**பிப்ரவரி-21, 2004, சனிக்கிழமை,**

**தஞ்சை - திருவள்ளுவர் திடல்.**

# "துவளாதே தமிழகமே... போராடு!"

## காலை 10 மணி முதல் - கருத்தரங்கம்

தலைமையுரை : **தோழர் காளியப்பன்,**
மாநில இணைச் செயலர்,
ம.க.இ.க., தமிழ்நாடு.

உரையாற்றுவோர் : **முனைவர் ஆனந்த் தெல்தும்ப்டே,** மும்பை.
**தோழர் ஆ. சிவசுப்பிரமணியன்**
**தோழர் எஸ்.லட்சுமணப் பெருமாள்,** எழுத்தாளர்.
**பேரா. பெரியார்தாசன்,** சென்னை.
**மையக் கலைக்குழு,** ம.க.இ.க.,

மதுரை நிஜ நாடக இயக்கம் வழங்கும்
**"கலகக்காரர் தோழர் பெரியார்" - நாடகம்**
நெறியாளுகை: **பேரா. மு. ராமசாமி**

## மாலை - கலை நிகழ்ச்சிகள் - நேருரைகள்

- **தப்பாட்டம் :** வீரசோழ தப்பாட்டக் கலைக்குழு, *ரெட்டிப்பாளையம், தஞ்சை.*
- **பெரிய மேளம் :** முனுசாமி குழுவினர், *கருவெட்டாம்பாறை, திருவண்ணாமலை.*
- **தமுருக் கொட்டு :** அன்பரசன் தமுரு குழு, *சிதம்பரம்.*
- **உறுமி மேளம்:** பெரியண்ணன் குழுவினர் மற்றும் சரவணன், *மதுரை.*
- **பின்னல் கோலாட்டம் :** தென்னவன், லவன்-குசன் குழுவினர், *தஞ்சை.*
- **பாசிசப் பேயோட்டல் :** ம.க.இ.க. கலைக்குழு மற்றும் பெரியண்ணன் குழுவினர், *மதுரை.*
- **தெருக்கூத்து:** பாவலர் ஓம் முத்துமாரி, *(செயலர், நலிந்த கலைஞர்கள் நல்வாழ்வுச்சங்கம்)* மற்றும் குழுவினர், திருவேங்கடம், நெல்லை.
- **'தற்கொலை' - நாடகம்:** வி.வி.மு., *கம்பம்.*
- சிறுவர்களின் கலைநிகழ்ச்சி.
- ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நீக்கத்தை எதிர்த்து மும்பையிலுள்ள டாடா நிறுவனத்தின் தலைமை அலுவலக வாயிலில் தீக்குளித்து இறந்த **ஆனந்த் தால்வி** (சிவசேனா தொண்டர்), **அக்தர் கான்** (தமிழ் முசுலீம்) ஆகிய முன்னணித் தொழிலாளர்களின் மனைவியர் நேருரை.
- விவசாயத்தின் மீதான தாக்குதலால் மண்ணை விட்டு மரணத்திற்குத் துரத்தப்படும் விவசாயிகளின் கண்ணீர்க் கதை: **தோழர் சிவகாமு,** வி.வி.மு., உசிலம்பட்டி.
- பணி நீக்கம் செய்யப்பட்டதால் பட்டினிச் சாவுக்கும் தற்கொலைக்கும் தள்ளப்பட்ட தமிழகத்தின் சாலைப் பணியாளர்கள்: குடும்பத்தினர் / சங்கத்தினரின் நேருரை.
- ***நேருரைகளின் கண்ணீரில் கவிதைத் தீ மூட்டும் ம.க.இ.க. கலைக்குழுவின் பாடல்கள்.***
- **இராக்:** ***இசைச் சித்திரம்***
- ***ம.க.இ.க. கலைக்குழுவின் புரட்சிகரக் கலை நிகழ்ச்சி***
- **"துவளாதே தமிழகமே.. போராடு!" - இசை முழக்கம்.**

## மக்கள் கலை இலக்கியக் கழகம் - தமிழ்நாடு

22.02.04 பிற்பகல் - **தஞ்சையில்**

**கருத்தரங்கம்**

***தலித் விடுதலை***
**திசைவழியும், விலகல்களும்**

**உரை:**

முனைவர் **ஆனந்த் தெல்தும்ப்டே,**
*மும்பை.*

(நூலாசிரியர்: அம்பேத்கருக்குப் பிந்தைய தலித் இயக்கங்கள்; முசுலீம்கள் குறித்து அம்பேத்கர்)

கருத்தரங்கம் நடைபெறும் இடமும் துவங்கும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

படிப்பகம்